Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 85 சுபகிருது வருடம், ஐப்பசி மாதம் 02ஆம் திகதி புதன்கிழமை (19.10.2022) ஹிஜ்ரி 1444, ரபிஉல் அவ்வல் - 22 0115886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50

## எரிபொருள் விநியோகம் இடைநிறுத்தம்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின்மறுசீரமைப்புக்கு எதிராக அதன் ஊழியர்கள் ஆரம்பித்துள்ள பணிப் புறக்கணிப்பு காரணமாக எரிபொருள் விநியோகம் உள்ளிட்ட அனைத்து...

02 பக்கம்

## களனியில் மாணவர் போராட்டம்

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் வசந்த முதலிகே மற்றும்...

02 பக்கம்

## தீபாவளி முற்பணம் வழங்க மின் பட்டியல் தேவை

### 'ஷொக்' கொடுக்கும் தோட்டக் கம்பனிகள்

(நமது விசேட செய்தியாளர்)

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு தீபாவளி முற்பணம் வழங்குவதற்கு தோட்ட நிர்வாகத்தினால் மின் கட்டணப் பட்டியல் கோரப்படுவதாக பாதிக்கப்பட்ட மக்கள் 'தமிழன்' நாளிதழுக்கு தெரிவித்தனர். தொழிலாளர்களுக்கு தீபாவளி முற்பணமாக 15 ஆயிரம் ரூபா வழங்குவதற்கு தோட்டக் கம்பனிகள் இணங்கியுள்ள போதிலும் அதனைப் பெற்றுக்கொடுப்பதற்கு கடும் கெடுபிடிகள் விதிக்கப்பட்டுள்ளன.

தோட்டத்தில் தொழில்புரியும் தொழிலாளியொருவர் தேசிய அடையாள அட்டையையும் மின் கட்டணப்...

02 பக்கம்

## "எமது கதைகளைக் கூறுவோம்; கூறிக்கொண்டே இருப்போம்"



'புக்கர்' விருது வென்றார் ஷெஹான்

02 பக்கம்

# 22ஆவது திருத்தம் இழுபறியில்!

## புதிய திருத்தங்களை செய்ய அரசு ஆராய்வு; வாக்கெடுப்புக்கு செல்லாதிருக்கவும் யோசனை

(நமது அரசியல் செய்தியாளர்)

அரசியலமைப்பின் 22ஆவது திருத்தச் சட்டமூலம் குறித்து நாளை 20 மற்றும் நாளை மறுதினம் 21 ஆகிய திகதிகளில் இரண்டு நாட்களுக்கு விவாதம் நடத்தப்பட்டாலும் அதனை நிறைவேற்றுவதற்கான வாக்கெடுப்பு பின்னர் இடம்பெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

22ஆவது திருத்த வரைவு தொடர்பாக...

02 பக்கம்

## குளவிக்கொட்டு காரணமாக மலையகத்தில் 127 பேர் பலி

சிறுத்தைகள் மீது

அக்கறைகொண்ட அரசு

மக்களை மறந்ததாக

வடிவேல் சுரேஷ் சபையில் ஆவேசம்

(எம். சுசிகலா)

தேயிலைத் தோட்டங்கள் காடாக மாறியிருக்கின்றன. நாங்கள் பொருளாதாரத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கின்றோம். நல்ல மண் வளத்தைக் கொண்ட மலையகம் காடாகிக் கிடக்கின்றது. மலையகத்தில் கடந்த ஒரு வருடத்தில் 127 பேர் குளவிக் கொட்டுக்கு இலக்காகி...

02 பக்கம்

## புதிய நீர் இணைப்புக் கட்டணம் அதிகரிப்பு

புதிய நீர் இணைப்புகளுக்காக அறவிடப்படும் கட்டணத்தை அதிகரித்துள்ளதாக நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் மூலப்பொருட்களுக்கான தட்டுப்பாடு மற்றும் அவற்றின் அதிகரிப்பு என்பவற்றை கருத்திற்கொண்டு இந்த கட்டண உயர்வு மேற்கொள்ளப்படவுள்ளதாக அந்த சபையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

புதிய நீர் இணைப்பைப் பெற்றுக்கொடுப்பதற்கான 17,042.50 ரூபா கட்டணம் 24ஆயிரத்து 500 ரூபாவாக...

02 பக்கம்

## முச்சக்கரவண்டிகளுக்கு மேலதிக எரிபொருள்




நாட்டிலுள்ள முச்சக்கரவண்டிகளுக்கு மேலதிக எரிபொருளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர நாடாளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

நாடாளுமன்றம் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில் நேற்றுக் காலை கூடியது.

02 பக்கம்

## முற்போக்கு கூட்டணி செயலர் விலகினார்

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் செயலாளராக பதவி வகித்த சந்திரா சாப்டர் இராஜினாமா செய்வதாக அறிவித்துள்ளார்.



இதனை கூட்டணியின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வே.இராதாகிருஷ்ணன் 'தமிழன்' நாளிதழுக்கு உறுதிப்படுத்தினார்.

செயலாளரது பதவி விலகல் தொடர்பில் கூட்டணியின் தலைவர்...

02 பக்கம்

## வருகிறது சீனக் கப்பல்

(கே.சுபானி)

இலங்கை கடற்பரப்பில் தீப்பற்றியெரிந்து நீரில் மூழ்கிய எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் சிதைந்த பாகங்களை மீட்பதற்காக சீனக் கப்பல் ஒன்று இன்று அல்லது நாளை வருகை தரவுள்ளதாக கடற்சார் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகார சபை அறிவித்துள்ளது.

இவ்வாறு நாட்டுக்கு வருகை தரும் சீனக் கப்பல் சில மாதங்கள் நாட்டின் கடற்பரப்பில் தரித்துநின்று, தீப்பற்றியெரிந்த கப்பலின் சிதைந்த பாகங்களை மீட்கவுள்ளதாக அதிகார சபையின் தலைவர் சட்டத்தரணி தர்ஷினி லஹந்தபுர தெரிவித்தார்.

மேலும், கப்பல் தீப்பற்றியெரிந்தபோது சிதறிய பாகங்கள் உள்ளிட்ட ஆயிரத்து 700 மெற்றிக் தொன்...

02 பக்கம்

## அரச ஊழியர்களின் சம்பளம் ஓய்வூதியத்துக்கு ரூ.120.6 பில்.

### மாதாந்த செலவென அமைச்சர் பந்துல அறிவிப்பு

(நா. தினுஷா)

மக்களின் வரிப்பணம் மற்றும் வரியற்ற வருமான முறைகளினூடாக மாதாந்தம் திறைசேரிக்கு 150 பில்லியன் ரூபா வருமானம் கிடைப்பதாகவும், அதில்...

02 பக்கம்

## அரச சொத்துகளின் பயன்பாடு குறித்து ஆராய்கிறது அரசு

(நா. தினுஷா)

கொள்ளுப்பிட்டியிலிருந்து பாணந்துறை வரையான பகுதியிலுள்ள அரச சொத்துகளின் முறையான பயன்பாடு தொடர்பில் முழுமையான அறிக்கையொன்றை வழங்குமாறு கொழும்பு மாவட்ட செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு வலியுறுத்தியுள்ளதாக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே...

02 பக்கம்

## பட்ஜெட் சபையில் சமர்ப்பிப்பு

02 பக்கம்

## உரிய நேரத்தில் தேர்தல் என்பதே எமது நிலைப்பாடு!

### கூறுகிறார் பெரமுனவின் செயலாளர் சாகர

(நா. தினுஷா)

உரிய நேரத்தில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதே எங்களின் நிலைப்பாடாகும். எனவே, நிச்சயமாக தேர்தலை காலந்தாழ்த்தவோ அவ்வாறாதொரு சூழ்நிலைக்குச் செல்லவோ போவதில்லை என்று பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம்...

02 பக்கம்

## நல்லிணக்கம் தொடர்பாக அமைச்சரவை உபகுழு

### அமைச்சரவைத் தீர்மானங்கள்

05 பக்கம்




நாடாளுமன்றத்தை அடுத்த வருடம் கலைத்து தேர்தலுக்கு செல்லலாம் என்று ரணில் தீர்மானித்தகையோடு, அவரின் அந்த முடிவை மாற்றுமாறு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் எம்.பிக்கள் கூட்டாக கோரிக்கை விடுக்க ஆரம்பித்துள்ளனராம். பொதுத் தேர்தல் ஒன்று வந்தால் ஏராளமானோருக்கு வீடு செல்ல வேண்டியேற்படும் என்று கருதப்படுவதால் இப்போதைக்கு தேர்தல் தேவை இல்லை என்று சொல்கிறதாம் பெரமுன எம்.பிக்கள் குழு.

## கோட்டாவின் மாலைதீவுக்கான விமானப் பயணம்; தகவலறியும் விண்ணப்பம் படையினால் நிராகரிப்பு

(றிப்தி அலி)

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நாட்டை விட்டு மாலைதீவுக்கு தப்பியோடுவதற்காக பயன்படுத்திய விமானம் தொடர்பான தகவல்களைப் பெறுவதற்காக சமர்ப்பிக்கப்பட்ட தகவலறியும் விண்ணப்பத்தை இலங்கை விமானப்படை நிராகரித்துள்ளது.

விமானப் படையின் தகவல் அதிகாரி மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி ஆகிய இருவருமே மேற்படி விடயம் தொடர்பிலான தகவலறியும் விண்ணப்பத்தை நிராகரித்தனர்.

"2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க தகவலறியும் உரிமைச் சட்டத்தின் 5 (1) (ஆ) (1)ஆவது சரத்தின் கீழே இந்த விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளது" எனவும் விமானப் படை குறிப்பிட்டது.

அரசின் பாதுகாப்பை அல்லது அதன் ஆட்புல இறைமையை அல்லது தேசிய பந்தோபஸ்தை பாதிக்கக் கூடியதாக இருக்குமிடத்து தகவலைப்பெற அணுகுதலுக்கான இச்சட்டத்தின் கீழான வேண்டுகோளொன்று மறுக்கப்படுதல் வேண்டுமென குறித்த சரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொழும்பு, கோட்டை பிரதேசத்தில் கடந்த ஜுலை 9ஆம் திகதி இடம்பெற்ற பாரிய போராட்டத்தையடுத்து இலங்கை விமானப் படைக்கு சொந்தமான விமானத்தில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மாலைதீவுக்கு கடந்த ஜுலை 13ஆம் திகதி தப்பியோடினார்.

02 பக்கம்

## கமெண்ட் கந்தர்..

அப்படியெண்டா 22 ஆவது திருத்தம் வரும்... ஆனால் வராது என்னங்கோ...



## குளவிக்கொட்டு...

உயிரிழந்துள்ளனர். பன்றி, சிறுத்தைப் புலி தாக்கி எமது உறவுகள் உயிரிழந்துள்ளனர். சிறுத்தைப் புலிகள் மீது அக்கறைகொண்ட அரசாங்கம் மக்கள் மீது அக்கறை கொள்வதில்லை. சிறுத்தைப் புலிகளைப் பாதுகாப்பதற்காக அங்கு பல திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டாலும் அந்த மக்களை காப்பாற்ற எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லையென நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் தெரிவித்தார்.

பெற்றோலிய உற்பத்திகள் விசேட ஏற்பாடு ஒதுக்கீட்டு திருத்தச் சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு தொடர்பாக நாடாளுமன்றத்தில் நேற்று (18) இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

2023 மார்ச் மாதத்துடன் மலையக மக்கள் இலங்கைக்கு வந்து 200 வருடங்களாகின்றன. 200 வருடங்கள் கடந்தும் இவர்களுக்கான அங்கீகாரம், இவர்களின் தேவை, இவர்களின் உரிமை மாறி மாறி வருகின்ற அரசாங்கத்தால் மீறப்பட்டுள்ளது. இன்று ஆறாவது பரம்பரையாக வாழ்ந்துகொண்டிருக்கும் எங்களுடைய மக்களின் வாழ்க்கையை இந்த அரசாங்கம் வெறுமனே பெருந்தோட்டக் கம்பனிகளிடம் ஒப்படைத்துள்ளது. பெருந்தோட்ட நிறுவனங்களை வழிநடத்துகின்ற கம்பனிகள் அவர்களை மிகவும் மோசமாக நடத்துகின்றன. அவ்வாறான பெருந்தோட்டக் கம்பனிகளின் நிர்வாக சீர்கேட்டால் எங்களுடைய தொப்புள்கொடி உறவுகள் சாய்ந்து மடிகின்றன.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் பசறை கனவரெல்லை தோட்டத்தைச் சேர்ந்த 26 வயதான கணேசமூர்த்தி என்ற தோட்டத் தொழிலாளி மின்சார ஒழுக்கின் காரணமாக உயிரிழந்துள்ளார். மலையகத்தில் கடந்த ஒரு வருடத்தில் 127 பேர் குளவிக் கொட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளனர். பன்றி, சிறுத்தைப் புலி தாக்கி எமது உறவுகள் உயிரிழந்துள்ளன. தேயிலைத் தோட்டங்கள் காடாக மாறியிருக்கின்றன. நாங்கள் பொருளாதாரத்தைப் பற்றி பேசிக்கொண்டிருக்கின்றோம். நல்ல மண் வளத்தைக்கொண்ட மலையகம் காடாகிக் கிடக்கின்றது. காழ்ப்புணர்ச்சி, இனவாதத்தின் காரணத்தால் எங்களுடைய சமூகத்துக்கு இந்த காணிகளைப் பிரித்துக் கொடுக்காமல், அந்தக் காணிகளை காடாக்கி, காட்டில் வாழக்கூடிய மிருகங்களெல்லாம் எமது மக்கள் வாழக்கூடிய இடங்களுக்கு வருகைதந்து எமது மக்களின் உயிரைப் பறிக்கின்றன.

இன்று அதன் விளைவாக ஹட்டன் இஞ்சஸ்ட்ரீ தோட்டத்தில் புலிக்குட்டிகள். இவ்வாறு மிருகங்கள், குளவிக்கொட்டுத் தாக்குதலால் உயிரிழந்தவர்களுக்கான நஷ்டஈடு என்ன? இதற்குப் பொறுப்பான அமைச்சுகள் எவ்வாறான நஷ்டஈட்டை வழங்குவதற்கு இருக்கின்றன? பசறை கனவரெல்லை கணேசமூர்த்தி, ஹப்புத்தளை பிட்டரத்மலை பொன்மலர், மடுல்சீமையில் பாம்பு தீண்டி 3 பேர் இறந்துள்ளனர். இதுபோல நுவரெலியா, மஸ்கெலியா, பொகவந்தலாவை போன்ற பகுதிகளில் பலர் பாதிப்படைந்துள்ளனர்.

யாப்பு சீர்த்திருத்தம் செய்கின்றபோது மலையக மக்களின் நில உரிமை, வீட்டுரிமை, சம அந்தஸ்து மற்றும் உரிய வகையில் உள்வாங்கப்படவேண்டும். சிறுத்தைப் புலிகள் மீது அக்கறைகொண்ட அரசாங்கம் மக்கள் மீது அக்கறை கொள்வதில்லை. சிறுத்தைப் புலிகளைப் பாதுகாப்பதற்காக அங்கு பல திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டாலும் அந்த மக்களை காப்பாற்ற எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. குளவிக்கூடுகள் ஆங்காங்கே காணப்படுகின்றன.

ஆகவே, மலையக மக்கள் 200 வருடகாலமாக பல வேதனைகளை சந்தித்துள்ளனர். பல வன்செயல் சம்பவங்களும் மலையக சமூகத்தை பாரிய இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன. எங்களுடைய மக்கள் புறக்கணிக்கப்படுகின்றனர். நீங்கள் செய்யப்படுகின்ற யாப்பு சீர்த்திருத்தத்தில் மலையக மக்களுக்கு ஒரு தனியான அலகு உடனடியாக வழங்க வேண்டும். அரசாங்கம் நேரடியாக காணிகளை எமது மக்களுக்கு வழங்கி சிறுதோட்ட உரிமையாளர்களாக்க வேண்டும். இந்த நாட்டில் வாழ்கின்ற ஏனைய இனத்தவர்களுக்குள்ள அனைத்து உரிமைகளும் 200 வருடங்களாக வாழும் எம் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும். அதுதான் சிறப்புரிமை.

எங்களுடைய வேலைத்திட்டங்களை வர்த்தமானியில் வெளியிடுங்கள். ஏன் எங்களுடைய வேலைகள் வர்த்தமானியில் வெளியிடப்படுவதில்லை? ஏன் மலையக மக்களுக்கு காணி உரிமை கொடுக்கவில்லை? ஏன் அதை வர்த்தமானியில் வெளியிட முடியாது? ஆயுதம் ஏந்தாதவர்கள் மலையக மக்கள். இனவாதத்தைத் தூண்டாதவர்கள் மலையக மக்கள். இந்த மண்ணையும் நாட்டையும் 200 வருடங்களாக நேசித்தவர்கள் எம் மக்கள். ஆகவே,அவர்களை வஞ்சிக்காதீர்கள். அவர்களின் உரிமையை உடனடியாகக் கொடுங்கள். யாப்பு சீர்த்திருத்தத்தில் தேசிய இனமாக எங்களைக் குறிப்பிடவேண்டும் - என்றார்.

## உரிய நேத்தில்...

தெரிவித்தார்.

நெலும் மாவத்தையிலுள்ள அந்தக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று (18) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தலை இல்லாமலாக்க முயற்சித்த சில அமைப்புகள் மற்றும் கட்சிகளைச் சேர்ந்த நபர்கள் மக்களின் பங்காளர்களாக செயற்பட முற்படுவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வரலாற்றில் எங்களது கட்சியும், கட்சித் தலைவர்களும் முறையான நேரத்தில் தேர்தலை நடத்துதல் அல்லது உரிய நேரத்துக்கு முன்னர் தேர்தலை நடத்த ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்கள். அதுவே எங்களின் கொள்கையுமாகும்.

நாங்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மக்களின் நிலைப்பாடுகளுக்கு பயந்து ஒளிந்ததும் இல்லை. ஜனநாயகத்தைப் பாதுகாத்தல், உரிய நேரத்தில் தேர்தலை நடத்துதல் போன்ற விடயங்களுக்கு பயங்கொள்ளப் போவதில்லை. பொறுப்பை மீறி தப்பிச் செல்லவும் போவதில்லை.

நாங்களே கட்சி என்ற அடிப்படையில் உரிய நேரத்தில் தேர்தலை நடத்தவேண்டும் என்று கோரி கடந்த காலங்களில் நீதிமன்றம் சென்றிருந்தோம். அந்த நிலைப்பாட்டிலேயே இன்றும் இருக்கிறோம்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இடம்பெறும் எந்தவொரு தேர்தலை எதிர்கொள்ளும் பலமும், அமைப்பும் எங்களுக்கு இருக்கிறது.

அதற்குத் தேவையான சூழலை ஏற்படுத்தி வருகிறோம். கட்சியையும் பலப்படுத்தி வருகிறோம். ஊடகங்களில் எவ்வாறான செய்திகள் வெளியிடப்பட்டாலும் எதிர்காலத்தில் இடம்பெறும் தேர்தலின்போது, சமூக ஊடகங்கள் வாக்களிக்கப்போவதில்லை. நாட்டு மக்களே வாக்களிப்பார்கள். எனவே, மக்கள் எங்களுக்காக வாக்குகளை வழங்கி வெற்றியின் உச்சத்துக்கு கொண்டுசெல்வார்கள் என்று நாங்கள் கடுமையாக நம்புகிறோம்.

நிச்சயமாக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தேர்தலை காலந்தள்ள மாட்டோம். அதற்கு இடமளிக்கவும் போவதில்லை. அவ்வாறாதொரு சூழ்நிலைக்குச் செல்லவும் மாட்டோம் - என்றார்.

## புதிய நீர்...

அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், புதிய அதிகரிப்பு தொடர்பிலான சுற்றுநிருபம் விரைவில் வெளியிடப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## 22ஆவது...

ஆளுங்கட்சிக்குள் தெளிவான பிளவு நிலவுவதால், வாக்கெடுப்புக்கு செல்வது பொருத்தமற்றது என்பதாலேயே இந்த முடிவு எடுக்கப்படவுள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஒரு பிரிவினர், இந்த வாக்கெடுப்பில் வாக்களிக்கப் போவதில்லையென ஏற்கனவே அறிவித்துள்ளனர். மற்றுமொரு தரப்பினர் திருத்தங்களைக் கோரியுள்ளனர்.

இந்த விடயங்கள் குறித்து நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலும், ஆளுங்கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திலும் விரிவாக பேசப்பட்டன. 22ஆவது திருத்தத்தின் சில விடயங்களை ஆதரித்தால் 19ஆவது திருத்தத்திற்கு ஆதரவளித்த அதே எம்.பிக்கள் ஊர்களுக்கு செல்ல முடியாதளவு மக்களின் விமர்சனங்களை எதிர்நோக்க வேண்டியேற்படுமென எம்.பிக்கள் பலர் இங்கு சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதனையடுத்தே 22ஆவது திருத்தம் தொடர்பில் விவாதித்து அதன் வாக்கெடுப்பை பின்னர் நடத்துவதென உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதேசமயம் நாளை சமர்ப்பிக்காமல் சில திருத்தங்களை செய்த பின்னர் இதனை நாடாளுமன்றில் சமர்ப்பிக்கலாமென ஆளுங்கட்சி எம்.பிக்கள் சிலர் கூறியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## தீபாவளி...

பட்டியலையும் நிர்வாகத்துக்கு சமர்ப்பிக்க வேண்டுமென கோரப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டம், ட்ரைட்டன், டெவொன், சென்கிளயர், சென் ஹென்ரூ, மவுண்டன், திம்புள்ளை, டெரிக்ளயர் ஆகிய தோட்டங்களில் இவ்வாறு தொழிலாளர்களிடம் நிர்வாகத்தினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மேலும், ஏனைய தோட்டங்களிலும் நிர்வாகத்தினால் இவ்வாறான நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக அறியமுடிந்தது.

இதன் காரணமாக தொழிலாளர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

பெருந்தோட்டக் கம்பனிகளால் தீபாவளி முற்பணமாக 10 ஆயிரம் ரூபா வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதிலும் குறிப்பாக 75 வீத வரவுடையோருக்கு மாத்திரமே அந்தத் தொகை வழங்கப்படவிருந்தது. ஏனையோருக்கு வரவு வீதத்தின் அடிப்படையில் அதற்குக் குறைவான தொகையை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் ஆகியோர் நாடாளுமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

இதனையடுத்து தோட்டக் கம்பனிகள் தீபாவளி முற்பணமாக 15 ஆயிரம் ரூபா வழங்குவதற்கு இணங்கின. இந்தப் பின்னணியில் தோட்டக் கம்பனிகள் முற்பணத்தை வழங்குவதில் கெடுபிடிகளை அதிகரித்துள்ளன.

## முற்போக்கு கூட்டணி...

மனோ கணேசன் எம்.பிக்கும் தேர்தல்கள் ஆணையாளருக்கும் சாப்டர் அறிவித்துள்ளார்.

வயது மூப்பின் காரணமாக பணிகளை முன்னெடுக்க முடியாமையால் அவர் பதவி விலகுவதாக அறிவித்துள்ளதாக இராதாகிருஷ்ணன் எம்.பி. தெரிவித்தார்.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைமைக் காரியாலயம் டிக்கோயாவில் எதிர்வரும் 30ஆம் திகதி திறக்கப்படவுள்ள நிலையில் கட்சியின் செயலாளர் பதவி விலகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வருகிறது...

கழிவுகள், நீர்கொழும்பு - பமுனுகமவுக்கு அருகிலுள்ள கழிவுகள் சேமிப்பகத்தில் சேகரித்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும் இருதரப்பும் ஒப்புகொண்ட ஆய்வகங்களில் மேற்படி கழிவுகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பின்னரே அவற்றை அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என தர்ஷனி லஹந்தபுர மேலும் தெரிவித்தார்.

## எரிபொருள் விநியோகம்...

நடவடிக்கைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

கூட்டுத்தாபனத்தின் ஊழியர்கள் நேற்று (18) சுகயீன விடுமுறைப் போராட்டத்தை ஆரம்பித்தனர். இதன் காரணமாக எரிபொருள் விநியோக செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைந்தன. மேலும் போராட்டத்தை தொடரப்போவதாகவும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

இதேவேளை, எரிபொருள் விநியோகம் அத்தியாவசிய சேவைகளுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளதால் ஊழியர்களின் போராட்டம் சட்டவிரோதமானதென மின்சக்தி எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர நேற்று தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## கோட்டாவின்...

இதனை விமானப் படை உறுதிப்படுத்தியதுடன், இலங்கை அரசியலமைப்பில் நிறைவேற்று ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கமைய பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடனேயே இந்த விமானம் வழங்கப்பட்டதாகவும் விமானப் படை குறிப்பிட்டது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டுத் தப்பியோடும்போது பாதுகாப்பு அமைச்சராகவும், முப்படைகளின் பிரதானியாகவும் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பட்ஜெட்...

2023ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் முதலாவது மதிப்பீட்டுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றம் பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில் நேற்று (18) கூடியது. இதன்போது சபை முதல்வரும் கல்வி அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை சபையில் சமர்ப்பித்தார்.

இந்த ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் மூலம் கடன் சேவைச் செலவுகளை உள்ளடக்கிய 613 பில்லியன் ரூபா நிதி, அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சுக்கு 410 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது , அதில் இராணுவத்திற்கு 209 பில்லியன் ரூபாவும், கடற்படைக்கு 75 பில்லியன் ரூபாவும், விமானப்படைக்கு 66 பில்லியன் ரூபாவும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் ஆரம்பிக்கப்பட்ட பல்துறை படைக்கு 9.8 பில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்பு அமைச்சுக்கு 129 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன், 116 பில்லியன் ரூபா பொலிஸாருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. பொலிஸாரும் இராணுவத்தினரும் 539 பில்லியன் ரூபாவை பெற்றுள்ளனர். சுகாதார அமைச்சுக்கு 322 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சுக்கு 232 பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பொதுநிர்வாக அமைச்சுக்கு 856 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் 353 பில்லியன் ரூபா ஓய்வுதியத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

போக்குவரத்து அமைச்சுக்கு 372 பில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

## முச்சக்கர...

எரிபொருள் விலை குறைக்கப்பட்டுள்ள போதிலும் எரிபொருள் வழங்கும் நடைமுறையில் மாற்றங்கள் கொண்டுவரப்படவில்லையென இதன்போது எதிர்க்கட்சியினரால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு பதிலளித்தபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

நாட்டிலுள்ள முச்சக்கரவண்டிகளை பதிவுசெய்யும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. தொழில்முறையில் முச்சக்கரவண்டிகளை செலுத்தும் நபர்களை அந்தந்த பொலிஸ் நிலையங்களில் பதிவுசெய்துகொள்ளுமாறு நாம் வேண்டுகோள் முன்வைத்தோம். அதன்பிரகாரம் மூன்று இலட்சத்துக்கும் அதிகமான முச்சக்கர வண்டிகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

இவை தொடர்பில் முழுமையான தரவுகள் பெறப்பட்டதன் பின்னர் புதிய கியு.ஆர். முறைமை கொண்டுவரப்படும். அதனூடாக முச்சக்கரவண்டிகளுக்கு மேலதிக எரிபொருளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். இன்னும் இரு வாரங்களில் அதனை நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளோம் - என்றார்.

## எமது கதைகளைக்...

2022ஆம் ஆண்டுக்கான புக்கர் பரிசு இலங்கையைச் சேர்ந்த எழுத்தாளர் ஷெஹான் கருணாதிலக்கவுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் சிறந்த நாவல் படைப்புக்காக வழங்கப்படும் இவ்விருது ஷெஹான் கருணாதிலக்க எழுதிய 'The Seven Moons of Maali Almeida' என்ற நூலுக்கு கிடைத்துள்ளது.

இந்த விருதுக்காக உலகம் முழுவதிலும் இருந்து 165 நூல்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்ததுடன், ஆறு படைப்புகள் பரிந்துரையில் இருந்தன. இந்நிலையில் ஐந்து பேர் அடங்கிய நடுவர் குழு ஷெஹான் கருணாதிலக்கவுக்கு விருதை அறிவித்தது.

லண்டனில் நடைபெற்ற விழாவில் இங்கிலாந்து மன்னர் மூன்றாம் சார்ள்ஸின் துணைவியார் கமிலாவிடமிருந்து அவர் இந்த விருதைப் பெற்றுக்கொண்டார்.

அங்கு ஆங்கிலம், சிங்களம், தமிழ் ஆகிய மூன்று மொழிகளிலும் அவர் உரை நிகழ்த்தினார்.

"இலங்கைச் சொந்தங்களே, எமது கதைகளைக் கூறுவோம். கூறிக்கொண்டே இருப்போம்" என அவர் தமிழில் தெரிவித்தார்.

ஷெஹான் கருணாதிலக்க எழுதிய இந்த நூல் போர்க்கால பாதிப்புகளை அடிப்படையாகக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## களனியில் மாணவர்கள்...

சிறிதம்ம தேரர் ஆகியோரை உடனடியாக விடுவிக்குமாறு கோரி களனி பல்கலைக்கழகத்துக்கு முன்னால் நேற்று (18) எதிர்ப்புப் பேரணியொன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த ஆர்ப்பாட்டத்தில், பெருந்திரளான மாணவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

இந்தப் பேரணி பயணித்த வீதியில் பல்வேறு பகுதிகளில் பொலிஸ் மற்றும் கிளர்ச்சி அடக்கும் பிரிவினர் கடமைக்கு அமர்த்தப்பட்டிருந்ததுடன், நீர்த்தாரை பிரயோக வாகனங்களும் சேவையில் அமர்த்தப்பட்டிருந்தன.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டுள்ள வசந்த மற்றும் சிரிதம்ம தேரர் ஆகியோரை விடுதலை செய்யுமாறும், பயங்கரவாதத் தடைச்சட்டம் உள்ளிட்ட அடக்குமுறைக்கு பிரயோகிக்கும் ஏற்பாடுகள் கொண்ட சகல சட்டங்களையும் நீக்குமாறு குறிப்பிட்டும் இந்த ஆர்ப்பாட்டப் பேரணி முன்னெடுக்கப்பட்டிருந்தது.

மேலும், ரணில் - ராஜபக்ஷவை விரட்டுவோம், மக்கள் உரிமைக்காக குரல் கொடுப்போம், காணாமலாக்கல், சிறைப்பிடித்தல் போன்ற விடயங்களை உடன் நிறுத்த வேண்டும், சகல போராட்டக்காரர்களையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும், பொருட்களின் விலைகளை குறைக்க வேண்டும் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் இதன்போது கோஷம் எழுப்பினர்.

பேரணியின் இடையில் பெருந்திரளான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்த நிலையில், தொடர்ந்து தமது பேரணியை முன்னெடுக்க முடியாமல் போனதால் போராட்டக்காரர்கள் வீதியிலேயே அமர்ந்திருந்து தமது எதிர்ப்புக் கோஷங்களை எழுப்பியிருந்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் காரணமாக அந்த பிரதேசத்தில் வாகன நெரிசலையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

**சர்வதேச அமைப்புகள் ஆதரவு**

கொழும்பில் இடம்பெறும் மாணவர்களின் ஆர்ப்பாட்டம் தொடர்பில் நான் கவனம் செலுத்தியுள்ளேன். இந்த ஒன்றுகூடலில் உரிமை மீறல்கள் எதுவும் இடம்பெறாமல் பார்த்துக்கொள்ளுங்கள் என ஐக்கிய நாடுகள் சபையின் விசேட பிரதிநிதி மேரி லோவலர் தெரிவித்துள்ளார்.

மேலும், அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டத்துக்கு மதிப்பளிக்க வேண்டும் என்றும் மாற்றமொன்றை எதிர்பார்த்தே மாணவர்களால் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படுவதாக அமைதியான ஒன்றுகூடலுக்கான ஐ.நாவின் சிறப்பு பிரதிநிதி கிளமென் வோல் சுட்டிக்காட்டியள்ளார்.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பு செயலாளர் உள்ளிட்டோர் 60 நாட்களுக்கு மேலாக தடுத்துவைப்பதற்கு அரசாங்கம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை பயன்படுத்துவதற்கு எதிராக மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்துள்ளார்கள்.

அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான உரிமையை எளிதாக்குவதற்கும், மதிப்பதற்கும், பாதுகாப்பதற்கும் இலங்கை அரசாங்கத்தின் நேர்மறையான கடப்பாட்டை நினைவூட்ட விரும்புவதாக சர்வதேச மன்னிப்புச் சபை அறிவித்துள்ளது.

மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு இளைஞர் வழக்கறிஞர்கள் சங்கமும் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அரச சொத்துகளின்...

இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நான்கு மாத காலப்பகுதியில் வரலாற்றில் என்றும் இல்லாதளவுக்கு புகையிரத சேவைப் பிரிவிலுள்ள பிரச்சினைகள் குறித்து ஆராய அதிகளவான அமைச்சரவைப் பத்திரங்களை சமர்ப்பித்துள்ளேன். பிரச்சினைகளை தீர்ப்பதற்காக நான் முழுமுயற்சி எடுப்பதற்கு காரணம், எரிபொருள் விலை அதிகரிப்பை அடுத்து புகையிரத போக்குவரத்தை பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை நூற்று மூன்று வீதத்தால் அதிகரித்துள்ளது. அந்த கேள்வியை நிரப்புவதற்கு பல்வேறு தடங்கல்கள் இருக்கின்றன. பொருளாதார நெருக்கடி இருக்கிறது. அதேபோன்று, இவ்வாறு போக்குவரத்துக்காக புகையிரத சேவையை நாடும் மக்களின் மனநிலை தொடர்பில் அதிக கவனம் செலுத்துமாறு புகையிரத தொழிற்சங்க ஊழியர்களிடம் நான் கோருகிறேன்.

ஏதாவதொரு தொழிற்சங்க நடவடிக்கைக்கு செல்வதாயின் அதற்கு முன்னர் கலந்துரையாடலுக்கு வரவேண்டும். இதுதொடர்பில் அவர்களுக்கு விளக்கமளித்துள்ளேன். குறிப்பிட்ட காலத்தை வழங்கவேண்டும். காரணம், சில விடயங்களில் எனக்கு தனியாக தீர்மானம் எடுக்க முடியாது. அமைச்சரவையில் இதுதொடர்பில் கலந்துரையாடியே படிமுறையாகவே தீர்வுகளை வழங்க முடியும். குடும்பப் பிரச்சினைகளை தீர்ப்பது போன்று அரச நிர்வாக பிரச்சினைகளுக்கு தீர்வு காணமுடியாது.

கலந்துரையாடலின் பின்னரே போராட்டங்களுக்கு செல்லவேண்டும் என்று அவர்களின் தொழிற்சங்க யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதையும் மீறி வேலைநிறுத்தப் போராட்டத்துக்கு செல்வார்களானால், அதனூடாக பயணிகளின் சந்திக்கும் பிரச்சினைகளை பொறுப்பேற்பதற்கு யாரும் இருக்கப்போவதில்லை.

நாடு சுதந்திரமடைந்ததன் பின்னர் இடம்பெற்ற ஒவ்வொரு பிரச்சினைகளுக்கும் நான் பொறுப்பேற்கவும் முடியாது. புகையிரதத்துக்கு தேவையான சாரதிகளின் எண்ணிக்கைக்கு அப்பால், ஒரு புகையிரதத்துக்காக பகுதியளவில் சாரதிகள் சேவைக்கு அமர்த்தப்படுவதாகவும், புகையிரத அதிகாரிகள் ஒவ்வொரு இடத்திலும் மாறுவதாகவும் மக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதனூடாக புகையிரத சேவைக்கான வருமானமும் பெருமளவில் அதிகரித்துள்ளதாக அநேகமான தரப்பினரிடமிருந்து பெரும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. எற்தபொரு அரச திணைக்களத்திலும் இல்லாத நீதி புகையிரதத் திணைக்களத்தில் மாத்திரம் நடைபெறுகிறதென்றால் அதுதொடர்பில் மக்கள் அவதானத்துடன் செயற்படவேண்டும்.

அரசுக்குரிய காணிகளில் பெருமளவு காணிகள் புகையிரதத் திணைக்களத்தின் கீழ் இருக்கின்றன. இவ்வாறான காணிகளை முகாமைத்துவம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் முதல் கட்டமாக பொலன்னறுவை மாவட்டத்துக்கு கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டு நிலுவை வரிப்பணத்தை சேகரித்தபோது ஒரு நாளைக்கு ஒரு கோடியே 6 இலட்சம் ரூபா சேகரிக்கப்பட்டிருந்தது.

கொள்ளுப்பிட்டியிலிருந்து பாணந்துறை வரையான பகுதியிலுள்ள அரச சொத்துகளின் முறையான பயன்பாடு தொடர்பில் முழுமையான அறிக்கையொன்றை வழங்குமாறும் கொழும்பு மாவட்ட செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு வலியுறுத்தியுள்ளேன்.

## அரச ஊழியர்களின்...

கடந்த மாதம் அரச ஊழியர்களுக்கான சம்பள கொடுப்பனவு மற்றும் ஓய்வூதியத்துக்காக 120.6 பில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

மேலும், இந்த வருடத்தில் 63 வயது முழுமையடைந்த சகல வைத்தியர்களும் எதிர்வரும் டிசம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வுபெற வேண்டும் என அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாரஹேன்பிட்டியிலுள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (18) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டிலேயே இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யார் நாட்டை ஆட்சி செய்தாலும், யார் நிதி அமைச்சரானாலும் மக்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் வரிப்பணமே திறைசேரிக்கு எடுக்கப்படுகிறது. இந்த முறையே அனைத்து நாடுகளிலும் பின்பற்றப்படுகின்றன. மக்களிடமிருந்து பெறப்படும் வரிப்பணமும், வரியற்ற வருமான முறையில் கிடைக்கும் வருமானத்தையும் பார்த்தால், அண்ணளவாக மாதத்துக்கு 150 பில்லியன் ரூபா கிடைக்கப்பெறுகின்றது.

அதனடிப்படையில் கடந்த மாதம் அரச உத்தியோகத்தர்களுக்கான சம்பள கொடுப்பனவுக்காக மாத்திரம் 93.9 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டிருந்ததாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய என்னிடம் தெரிவித்திருந்தார். ஓய்வூதிய கொடுப்பனவுக்கு மாத்திரம் 26.7 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆகவே, கடந்த மாதம் அரச உத்தியோகத்தர்களுக்கான சம்பள கொடுப்பனவு மற்றும் ஓய்வூதியத்துக்கு மாத்திரம் 120.6 பில்லியன் ரூபா செலுத்தப்பட்டுள்ளது. ஒவ்வாருநாளும் சிறிது சிறிதாக திறைசேரிக்காக சேர்க்கப்பட்ட நிதியே அரச உத்தியோகத்தர்களுக்கான சம்பளமாக செலுத்தப்பட்டுள்ளது. மக்களிடமிருந்து பெற்று மீண்டும் மக்களுக்கே செலுத்துகிறோம்.

வரிப்பணத்தை அறவிடும்போது அதற்கும் எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். அந்தப் பணத்தை பகிர்ந்தளிக்கும்போது அதற்கும் எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். அவ்வாறெனில், ஆட்சி முறை குறித்து சிறிதளவும் அறியாதவர்களே இவ்வாறு பேசுகிறார்கள். இதற்கு மாற்றுத் தீர்வு அல்லது மேலும் வருமானத்தை ஈட்டும் முறை தொடர்பான யோசனை எதுவும் யாரிடமாவது இருக்குமாக இருந்தால் எங்களிடம் முன்மொழியலாம். எதிர்காலத்தில் இந்த விடயம் அடுத்து வரவு-செலவுத் திட்டத்தில் கவனம் செலுத்தக்கூடியதாக இருக்கும்.

அரச வருமானத்தை முடிந்தளவு அதிகரித்தல் மற்றும் செலவீனத்தை முடிந்தளவு கட்டுப்படுத்துவதனூடாகவே இந்த நிலைமை சீர்செய்யலாம். வருமானத்தை ஈட்டுவது மிகவும் மோசமான நிலையாகும்.

இருந்தபோதும், ஓய்வூதிய வயதெல்லை 60 ஆக நிர்னயிக்கப்பட்டதைத் தொடர்ந்து அதற்கு முன்னர் இருந்த வயதெல்லை தொடர்பில் ஆராய விசேட அமைச்சரவை உபகுழுவொன்றும் நியமிக்கப்பட்டிருந்தது. இந்த உபகுழுவின் அறிக்கை நேற்று (நேற்று முன்தினம்) இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த அறிக்கையின் பிரகாரம், ஒட்டுமொத்த அரச சேவைக்கும் பொதுவான தீர்மானமாக 60 வயது முழுமையடைந்த சகல அரச சேவையாளர்களும் ஓய்வு பெறுவார்கள் என்று அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டதுடன், இதனூடாக சுதந்திர சுகாதார சேவையில் ஏற்படக்கூடிய பிரச்சினைகள் குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டது.

63 வயது நிரம்பிய சகல வைத்தியர்களும், எதிர்வரும் டிசம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வு பெறவேண்டும் என்றும், இதுவரையில் 62 வயது நிரம்பிய வைத்தியர்கள் அவர்களுக்கு 63 வயதாகும்போது தமது பதிவியிருந்து நீங்க வேண்டும், 61 வயதானவர்கள் அவர்களுக்கு 62 வயதாகும் போது ஓய்வு பெறவேண்டும், இந்த வருடத்தில் 60 வயதாகும் வைத்தியர்கள் 61 வயதாகும் போது ஓய்வுபெற வேண்டும், 59 வயதுடையவர்கள் 60 வயதாகும்போது ஏனைய அரச சேவையாளர்களை போன்று ஓய்வு பெற வேண்டும், உத்தேசிக்கப்பட்ட வைத்தியர்களின் ஓய்வு பெறும் கால எல்லைக்காக இடைக்கால வேலைத்திட்டம் 2023 டிசம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் நிறைவுக்கு வருவதாகவும் குறித்த வயதெல்லைக்குட்பட்டவர்கள் ஓய்வுபெற வேண்டும் என்றும் குழுவினால் பரிந்துரை முன்வைக்கப்பட்டிருந்தது. இதற்கு அமைச்சரவை அனுமதியும் கிடைக்கப்பெற்றிருந்தது - என்றார்.

# வசந்த முதலிகேவுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு!



அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகேவுக்கு எதிராக பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்ட தடுப்புக்காவல் உத்தரவின் சட்டபூர்வமான தன்மையை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுக்கள் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, நவம்பர் 10ஆம் திகதிக்கு உயர் நீதிமன்றத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், மேலும் எதிர்மனுதாரர்களைச் சேர்த்து மனுக்களை (தலைப்புரைகள்) திருத்த மனுதாரர்களுக்கு உயர் நீதிமன்றம் நேற்று அனுமதியளித்துள்ளது. மனுதாரர்கள் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி உபுல் ஜயசூரிய, சட்ட மா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபனைகளிலிருந்து மேலும் பிரதிவாதிகளை சேர்த்து தலைப்புகளில் திருத்தம் செய்ய நீதிமன்றத்தின் அனுமதியைக் கோரினார்.

நீதிபதிகள் எஸ்.துரைராஜா, ஷிரான் குணரத்ன மற்றும் மஹிந்த சமயவர்தன ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் நவம்பர் 10ஆம் திகதி இந்த மனுக்களை ஆதரிப்பதற்கான மனுக்களை ஒத்திவைத்தது.

வெல்வெவ சிறிதம்ம தேரர் மற்றும் ஹஷான் ஜீவந்த குணதிலக்க ஆகியோர் முறையே ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் மற்றும் களனி பல்கலைக்கழகத்தின் இளங்கலை பட்டதாரிகளும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தாம் தடுத்துவைக்கப்பட்டுள்ளதை எதிர்த்து மனுக்களை தாக்கல் செய்திருந்தனர்.

முதலிகேவை கைதுசெய்து காவலில் வைத்திருப்பது சட்டவிரோதமானது என அறிவிக்குமாறு மனுதாரர்கள் கோரியுள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் பிறப்பிக்கப்பட்ட தடுப்புக்காவல் உத்தரவுகளின் கீழ் தம்மைக் கைதுசெய்து தடுத்துவைத்திருப்பது சட்டபூர்வமற்றது என மனுதாரர்கள் சவால் விடுத்துள்ளனர். கைதிகளை சட்டத்தின் அடிப்படையில் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த இடைக்கால உத்தரவு பிறப்பிக்குமாறு மனுதாரர்கள் மேலும் கோரியுள்ளனர்.

மனுதாரர்கள் பிரதிவாதிகளாக பொலிஸ் மா அதிபர் சந்தன விக்கிரமரத்ன, குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் காவிந்த பியசேகர, டிஐடியின் பணிப்பாளர் பிரசன்ன அல்விஸ், சட்ட மா அதிபர் உட்பட பலர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

# டுபாயில் விற்கப்படும் இலங்கைப் பெண்கள்: வெளியானது பரபரப்புத் தகவல்!



சட்டவிரோதமாக பெண்களை டுபாய்க்கு அனுப்பிவைக்கும் வர்த்தகம், கொழும்பு ஆமர் வீதி பிரதேசத்தில் இடம்பெற்று வருவது தெரியவந்துள்ளது.

ஆமர் வீதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் இந்த மோசடியில் சிக்கி, டுபாய் சென்று, அங்கு விபத்துக்குள்ளாகி அங்கவீனமுற்ற நிலையில் நாடு திரும்பிய பெண்ணொருவர் வழங்கிய தகவல்களையடுத்து இது தெரியவந்துள்ளது.

ஆமர் வீதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயான பெண்ணொருவரே இந்தச் சம்பவத்தை எதிர்நோக்கியுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக தான் சகல தரப்பினருக்கும் அறிவித்துள்ளபோதிலும் இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லையென அந்தப் பெண் குற்றம் சுமத்தியுள்ளார்.

இலங்கைப் பெண்களை சுற்றுலா விசாவில் டுபாய்க்கு அனுப்பிவைத்து, அவர்களை அங்கு பாலியல் தொழிலுக்கு விற்பனை செய்வதாகவும் அந்தப் பெண் கூறியுள்ளார். இறுதியில் மோசடியாளர்களிடமிருந்து தப்பிக்க மேற்கொண்ட முயற்சியின்போது தான் ஒரு காலை இழக்க நேரிட்டது எனவும் அந்தப் பெண் மேலும் தெரிவித்துள்ளார்.

டுபாய் உட்பட மத்திய கிழக்கு நாடுகளுக்கு சுற்றுலா விசாவில் பெண்களை அனுப்பிவைத்து அவர்களை பாலியல் தொழிலில் ஈடுபடுத்தும் நடவடிக்கைகள் தொடர்பாக ஏற்கனவே சமூக வலைத்தள ஊடங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

இலங்கையிலுள்ள முகவர்கள் மற்றும் டுபாய் போன்ற நாடுகளிலுள்ள முகவர்களால் இலங்கைப் பெண்கள் இவ்வாறு பாலியல் தொழிலுக்கு தள்ளப்படுவதாகவும் அவற்றில் கூறப்பட்டிருந்தன.

மேலும் சுற்றுலா விசாவில் டுபாய்க்குச் சென்ற பல பெண்கள் அங்கு அநாதரவான நிலையில் இருப்பதாகவும் ஏற்கனவே செய்திகள் வெளியாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

## திலினியின் வியாபார பங்குதாரர் விளக்கமறியலில்

பல கோடி பெறுமதியான நிதி மோசடி குற்றச்சாட்டு தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள திலினி பியுமாலியின் வியாபார பங்குதாரராக அடையாளம் காணப்பட்ட இசுரு பண்டாரவை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

குறித்த நபரை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்றுமுன்தினம் (17) கைதுசெய்தனர்.

வாக்குமூலங்களைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அவரைக் கைதுசெய்தனர். அதனடிப்படையில் குறித்த நபரை இன்று (19) வரை விளக்கமறியலில் வைக்க கோட்டை மேலதிக நீதவான் உத்தரவிட்டுள்ளார்.



**சீனன்கோட்டை பாஸிய்யா பெரியபள்ளிவாசலில் சீனன்கோட்டை பள்ளிச் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற வருடாந்த மீலாதுன் நபி மௌலித் தமாம் மஜ்லிஸில் வெலிகாமம் கப்புவத்தை ரிபாயிய்யா மகளிர் அரபுக் கல்லூரி அதிபர் மௌலவி எம்.எஸ்.எம்.அப்துல்லாஹ் (ரவ்லி) பங்குபற்றியோர் மத்தியில் உரையாற்றுவதை படத்தில் காணலாம். (படம் - பேருவளை பி.எம்.முக்தார்)**

# காணாமல்போன கடற்படை படகுடன் 30 நாட்களுக்குப் பின்னர் தொடர்பாடல்

இலங்கைக் கடற்படையினர் சுமார் 30 நாட்களுக்குப் பின்னர் தெற்கு கடற்பரப்பில் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்ட கடற்படைக் கப்பலுடன் தொடர்பாடல் தொடர்புகளை மீள நிறுவியுள்ளனர்.

செப்டெம்பர் 17ஆம் திகதிக்குப் பின்னர் கப்பலிலுள்ள ஆறு மாலுமிகளுடன் தொடர்பாடல் தொடர்பை கடற்படை மீண்டும் ஏற்படுத்தியது.

செப்டெம்பர் நடுப்பகுதியிலிருந்து தெற்கு கடற்படை கட்டளையுடன் இணைக்கப்பட்ட பல நாள் கப்பலுடனான தொடர்பை கடற்படை இழந்ததையடுத்து, கூட்டு தேடுதல் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.

செப்டெம்பர் 16ஆம் திகதி தங்காலை கடற்கரையில் வழக்கமான ரோந்து பணிக்காக ஆறு கடற்படை புலனாய்வு அதிகாரிகளுடன் இது அனுப்பப்பட்டது.

கப்பல் தொடர்பில் அண்டைநாடுகளுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில், கப்பலை கண்டுபிடிப்பதற்காக கடற்படை மற்றும் விமானப்படை இணைந்து கூட்டு தேடுதல் நடவடிக்கையை முன்னெடுத்ததாக கடற்படை ஊடகப் பேச்சாளர் கப்டன் இந்திக டி சில்வா முன்னர் உறுதிப்படுத்தினார்.

தென் கடற்பகுதியில் ஏற்பட்ட கடும் நீரோட்டம் காரணமாக கப்பல் இலங்கைக் கடற்பரப்பில் இருந்து விலகிச்சென்றதாக ஆரம்பத்தில் ஊகிக்கப்பட்டது. மனித மற்றும் போதைப்பொருள் கடத்தலை தடுக்க இலங்கை கடற்படையினர் வழக்கமான ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

# சாதாரண தரப் பரீட்சை பெறுபேறு வெளியீட்டு திகதி அறிவிக்கப்பட்டது

சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நவம்பர் மாத இறுதிக்குள் வெளியிடப்படும் என கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தேசிய அடையாள அட்டை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டமையினால் மாணவர்கள் பிரச்சினைகளை எதிர்கொண்டதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி வெலேபொட எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே சுசில் பிரேமஜயந்த இதனைத் தெரிவித்தார்.

தேசிய அடையாள அட்டை வழங்குவதில் தாமதம் ஏற்படுவதைக் கருத்திற்கொண்டு, சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் அதிபரினால் வழங்கப்பட்ட அடையாளச் சான்று ஏற்றுக் கொள்ளப்படும் எனவும், பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் அடையாளத்தை மீள் சரிபார்ப்பதற்கு எவ்வித காரணமும் இல்லை எனவும் பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.





(அஷ்ரப் ஏ சமத்)

கொழும்பு - 12, அல்ஹிக்மா தேசியக் கல்லூரியில் க.பொ.த. உயர்தரம் 2021இல் 3 பாடங்களிலும் ஏ சித்திபெற்ற மாணவர்களை யும், உயர்தரப் பாடங்கள் கற்பித்த ஆசிரியர்கள் மற்றும் அதிபரையும் கௌரவிக்கும் நிகழ்வு கொழும்பு, வாழைத்தோட்டம் கல்வி அபிவிருத்தி அமைப்பின் ஏற்பாட்டில் நடை பெற்றது.

இந்நிகழ்வு கடந்த ஞயிற்றுக்கிழமை 16, மருதானை டவர் மண்டபத்தில் நடைபெற்றது. பிரதம அதிதியாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாகவும், தேசிய விளையாட்டு கவுன்ஸில் தலைவர் அர்ஜுன ரணதுங்க மற்றும் உலக அறிவிப்பாளர் பி.எச்.அப்துல் ஹமீத், கல்லூரி அதிபர் முல்லை முஸ்ரிபா, எஸ்.எஸ்.டி.எவ்இன் கல்லூரி ஆளுநர் டாக்டர் நஸீஹா அமீன், சேஃப்டி ப்ளஸ் உரிமையாளர் அல்ஹாஜ் எம்.எச்.நூருல்ஹக் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து கொண்டனர். பழைய மாணவரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான சியா உல் ஹசன் இந் நிகழ்வினை நெறிப்படுத்தினார்.

அல்-ஹிக்மா கல்லூரியின் பழைய ஆசிரி யர்கள், பிரதேச நலன்விரும்பிகள் மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர். மாணவர்களின் கலை நிகழ்வுகள் பலவும் இடம்பெற்றன.

இக் கல்லூரியை தேசிய கல்லூரியாக்குவதற் கான திட்டத்தினை அரசுக்கு முன்மொழிந்து அதனை நாடாளுமன்றத்தில் பேசி அதனைப் பெற்றுக் கொடுத்தவர் முன்னாள் அமைச்சர் ரவூப் ஹக்கீமையே சாரும்.

3 பாடங்களில் மூன்று ஏ சித்திபெற்ற மூன்று மாணவிகளுக்கும் பணப்பரிசில்களும் மடிக் கனனிகளும் வழங்கப்பட்டன.

# நன்கொடையாளர்களை உதவிகள் தேவைப்படுபவர்களுடன் இணைக்கும் Karuna.lk

டயலொக் அறக்கட்டளையினால் அறிமுகப்படுத்தப்படும் இலங்கையின் முதலாவது, அங்கீகரிக்கப்பட்ட தொண்டு செயற்றிட்டங்களுடன் கூடிய Crowd funding தளம் இந்த சவாலான காலக்கட்டத்தில் நடவடிக்கை எடுக்கவும், தேவைப்படும் சக இலங்கையர்களுக்கு உதவ விரும்பும் ஒத்த எண்ணம் கொண்டவர்களை ஒன்றிணைக்கும் முயற்சியில், டயலொக் அறக்கட்டளையின் முதன்மை மதிப்பீட்டாளர் - சர்வோதய சிரமதான சங்கம் மற்றும் சுயாதீன கணக்காய்வாளர் - PwC ஸ்ரீலங்கா ஆகியவை இணைந்து, உறுதிப்படுத்தப்பட்ட மற்றும் நம்பிக்கைக்குரிய இலாப நோக்கற்ற நிறுவனங்கள், மற்றும் தொண்டு செயற்றிட்டங்களை கொண்ட இலங்கையின் முதலாவது crowd funding தளமாக திகழும் Karuna.lk ஐ அறிமுகப்படுத்தியுள்ளது.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியின் பின்னணியில், சரியான நேரத்தில் உயர்மட்ட நிர்வாகத்தில் இயங்கும் நம்பகமான மற்றும் பாதுகாப்பான நிதி திரட்டலானது சமூகப் பொறுப்புணர்வு மூலம் பொருத்தமான முன்முயற்சியின் ஊடாக இலங்கையர் வாழ்வை வலுவூட்டுவதையும் வளப்படுத்துவதையும் நோக்கமாக கொண்டுள்ளது. தனிநபர்கள், இலாப நோக்கற்ற நிறுவனங்கள் மற்றும் நிறுவனங்கள், குறிப்பிட்ட சிறப்பு மதிப்பீட்டாளர்களால் மதிப்பாய்வு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்படும் செயல்முறையைப் பின்பற்றலாம். மேலும், முற்றிலும் இலவசமான மற்றும் பயன்படுத்த எளிதான சேவையைப் பெற Karuna.lk இல் தங்கள் காரணத்தை, தொண்டுகளை பதிவுசெய்யலாம்.

மேலும், நலன், சமூகம், கல்வி, அவசரநிலை, சுற்றுச்சூழல், விளையாட்டு, புற்றுநோய், விலங்குகள் பராமரிப்பு நலன் தன்னார்வத் தொண்டு உள்ளிட்ட பல்வேறு வகைகளில் பரந்து விரிந்துள்ள பல சமூகத்தொண்டு செயற்றிட்டங்களுக்கான அணுகலுடன், பயனாளிகளுக்கு நிதிப் பரிமாற்றத்தின் முழு வெளிப்படைத்தன்மையையும் இந்த தளம் நன்கொடையாளர்களுக்கு வழங்குகிறது. தற்போது, karuna.lk ஆனது UNDP, Red Cross, SOS Village, Heart To Heart Trust Fund, PRDA, Samastha Lanka Kidney Patient's Association, Child Action Lanka, மனிதநேய ஒன்றிணைவு மற்றும் பலவற்றை உள்ளடக்கிய அரசாங்க அங்கீகாரம் பெற்ற தொண்டு நிறுவனங்களுக்கு தாயகமாக உள்ளது. டெபிட்/ கிரெடிட் கார்டுகள் (மாஸ்டர் மற்றும் விசா), eZ Cash, Dialog add-to-bill, Star Points, சேவை நிலையங்கள் அல்லது ஒன்லைன் வங்கிப் பரிமாற்றங்கள் உட்பட பல்வேறு கட்டண தெரிவுகள் மூலம் நன்கொடையாளரின் விருப்பத்திற்கு அமைய சரி பார்க்கப்பட்ட காரணங்கள் தொண்டு நிறுவனங்களுக்கான நன்கொடைகளை வசதியாக வழங்கிடலாம்.

இந்நிகழ்வில் உரையாற்றிய டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் குழும பிரதம நிறைவேற்று அதிகாரி, சுபுன் வீரசிங்க "டயலொக் அறக்கட்டளைக்கு Karuna.lk ஐ அறிமுகப்படுத்துவதில் பெருமகிழ்ச்சி அடைவதுடன் பாக்கியமுமாகவும் கருதுகின்றோம். இந்த தளம் விரும்பியவர்களுக்கும் உதவக் கூடியவர்களுக்கும் உணவு, நன்கொடை அளித்தல், குழந்தையின் கல்விக்கு உதவுதல், இலங்கையின் இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் பலவற்றின் ஊடாக உதவிகள் தேவைப்படுபவர்களுக்கு உதவ நம்பகமான வழிமுறையை வழங்குகின்றது. ஒரு உணர்வுள்ள பெருநிறுவன பிரஜையாகவும் 17 மில்லியனுக்கும் அதிகமான இலங்கையர்களின் நம்பகமான டிஜிட்டல் துணையாகவும், இலங்கையர்களின் வாழ்க்கையை வலுவூட்டுவதற்கும் வளப்படுத்துவதற்கும் டயலொக் தொடர்ச்சியாக எமது சேவைகளை அர்ப்பணித்து வருகின்றது. ஒக்டோபர் மாதத்தில், டயலொக் அறக்கட்டளையானது தனது 10 வருட சேவையை கொண்டாடவுள்ளது மற்றும் Karuna.lk இன் அறிமுகமானது, இந்த சந்தர்ப்பத்திற்கு மிகவும் பொருத்தமான ஒன்றாக அமைந்திருக்கின்றது என நான் நம்புகிறேன்" என்றார்.

இந்நிகழ்வின்போது உரையாற்றிய சர்வோதய சிரமதான சங்கத்தின் தலைவர் கலாநிதி வின்யா ஆரியரத்ன, "சர்வோதய சங்கம் டயலொக் மற்றும் டயலொக் அறக்கட்டளையுடன் இணைந்திருப்பதையிட்டு எப்போதும் மகிழ்ச்சி அடைகின்றது. இரக்கமும் கருணையும் இலங்கை கட்டமைக்கப்பட்டதன் அடித்தளமாகும். மேலும், Karuna.lk அவர்களின் குரல்களை உயர்த்துவதற்கான ஒரு தளத்தை வழங்கி நம்பகமான தளத்தை அணுகுவதற்கு உதவத் தயாராக இருக்கின்றது. Karuna.lk தளத்தின் முதன்மை மதிப்பீட்டாளராக பணியாற்றுவதில் சர்வோதய சிரமதான சங்கம் மகிழ்ச்சியடைவதுடன், Karuna.lk இல் உள்ள கோரிக்கைகள் மற்றும் பெறுநர்களை நாங்கள் மதிப்பாய்வு செய்வோம். இலங்கையில் 60 வருடகால சேவை அனுபவத்துடன், இந்த பொருத்தமான மற்றும் சரியான நேரத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ள முன்முயற்சிக்கு தேவையான ஆதரவை வழங்க முடியும் என்று நாங்கள் நம்புகிறோம்.




***படத்தில் இடமிருந்து வலமாக PwC ஸ்ரீலங்காவின் பங்குதாரர் திவங்க ஜெயசிங்க, ஆசிஆட்டா குழும பெர்ஹாட், தலைமை நிறைவேற்று அதிகாரி, தொலைத்தொடர்பு வணிகம்/ குழும நிறைவேற்று உப தலைவர் டொக்டர் ஹான்ஸ் விஜயசூரிய, சர்வோதய சிரமதான சங்கத்தின் தலைவர் கலாநிதி வின்ய ஆரியரத்ன மற்றும் டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் இயக்குனர்/ குழும பிரதம நிறைவேற்று அதிகாரி, சுபுன் வீரசிங்க ஆகியோர் இலங்கையின் முதலாவது அங்கீகரிக்கப்பட்ட தொண்டு செயற்றிட்டங்களுடன் கூடிய Crowdfunding தளமாக திகழும் Karuna.lk இணையத்தளத்தை அறிமுகப்படுத்துகின்றார்கள்.***

PwC ஸ்ரீலங்காவின் பங்குதாரர், திவங்க ஜயசிங்க தனது கருத்துகளை தெரிவிக்கையில், "இலங்கை மிகவும் கடினமான காலகட்டத்தை கடந்து சென்றுகொண்டிருக்கின்ற நிலையில் வாழ்க்கையை எதிர்கொள்ளப் போராடும் பலர் உள்ளனர். பல சந்தர்ப்பங்களில் டயலொக் உடன் கைகோர்த்திருக்கும் சுயாதீன தணிக்கையாளர்கள் என்ற வகையில் சமூகங்களுக்கு உதவி தேவைப்படும்போது டயலொக் உதவுவதற்கு எவ்வாறு முன்வந்துள்ளது என்பதை நேரடியாகக் கண்டுள்ளோம். டயலொக் அறக்கட்டளையானது Karuna.lk தளத்துடன் முன்வந்துள்ளது. மேலும், இந்த முயற்சி பல நன்கொடையாளர்களை ஈர்க்கும் அதேவேளையில் தேவைப்படும் நபர்களுக்கு தேவையான உதவிகளை வழங்கும் என நம்புகிறோம். பயனாளிகளை நிதானப்படுத்தும் சர்வோதயா ஷ்ரமதான இயக்கத்துடன் மீண்டும் இணைந்து பணியாற்றுவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். மேலும், PwC சரியான பயனாளிகளுக்கு நிதி வழங்குவதை சரி பார்க்கவும் தளத்தின் தணிக்கையாளராகவும் செயற்படவுள்ளமையினையிட்டு பெருமை கொள்கின்றது. இந்த நிறுவனங்களுக்கிடையேயான ஒன்றிணைந்த இந்த முயற்சி Karuna.lk இன் நம்பகத்தன்மையை அதிகரிப்பது மட்டுமன்றி, மிகவும் தேவையான பங்களிப்புகளை ஊக்குவிப்பதோடு, எமது மக்கள் நீண்ட தூரம் செல்ல உதவும் எனவும் நம்புகின்றோம் என்று தெரிவித்தார்.

மேலதிக விபரங்களுக்கு Karuna.lk க்கு செல்லுங்கள்

தமிழன்
THAMILAN தமிழன்
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, ஒக்டோபர் 19ஆம் திகதி, புதன்கிழமை

# சீனாவின் பிரசன்னமும் இந்தியாவின் கரிசனையும்

இலங்கையில் சீன இராணுவத்தின் பிரசன்னம் அதிகரித்துள்ளமை குறித்து தமிழ்நாடு கரிசனை வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் மாநில புலனாய்வுப் பணியகம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இலங்கையில் சீனாவின் நடவடிக்கைகள் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக உள்ளதாக தெரிவித்துள்ள மாநில புலனாய்வுப் பிரிவு, கரையோரப் பகுதிகளில் கண்காணிப்பை அதிகரிக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

சீன இராணுவத்தினரின் நடமாட்டம், செய்மதிகள் போன்ற உயர் தொழில்நுட்ப சாதனங்கள் பயன்பாடு இலங்கையின் வடபகுதியில் ஆளில்லா விமானங்கள், ஏனைய சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றமை போன்றவற்றினால் தமிழ்நாட்டின் கரையோரப் பகுதிகளில் கடுமையான கண்காணிப்பு நடவடிக்கைகள் அவசியம் என மாநில புலனாய்வுப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

அனைத்து நகரங்கள், மாவட்டங்களுக்கும் இந்த எச்சரிக்கை அனுப்பப்பட்டுள்ளது. கடலட்டை வளர்ப்பை தொடங்குவதற்கு சீன இராணுவம் அதிநவீன சாதனங்களைப் பயன்படுத்துகின்றதென தமிழ்நாடு புலனாய்வுப் பிரிவினர் எச்சரித்துள்ளனர்.

இலங்கையைச் சேர்ந்த அரசியல் கட்சியொன்றின் உறுப்பினர்களின் உதவியுடன் சீன இராணுவத்தைச் சேர்ந்த சிலர் இரகசியமாக இந்தியாவிற்குள் நுழைந்துள்ளனர் என சில நாட்களுக்கு முன்னர் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையிலேயே இந்த எச்சரிக்கை வெளியாகியுள்ளது.

சீனத் தரப்பினரின் பிரசன்னத்துக்குப் பின்னால் புதைந்து கிடக்கும் மூடுமந்திரங்கள் போன்ற விடயங்களை வடக்குத் தமிழர்கள் அறியாராயினும், வடக்கில் சீனப் பிரசன்னம் அதிகரித்து வருவதை அவர்கள் வெளிப்படையாகவே உணர்கின்றார்கள்.

மேற்படி தமிழக உளவு அமைப்பு எச்சரித்தபடி கடலட்டை உற்பத்திக்கு ஊக்குவிப்பு என்ற கோதாவில் போர்வையில் சீன ஆதிக்கமும் ஆக்கிரமிப்பும் திடீரென அதிகரித்து வருகின்றமை கண்கூடு.

நேரடியாக சீன நிறுவனங்களின் பெயரில் இங்கே வந்து குதிப்பது வெளிப்படையாக உண்மை நிலைவரத்தை அம்பலப் படுத்திவிடும் என்பதால், தென்னிலங்கை நிறுவனங்களை கடலட்டை உற்பத்தியில் ஈடுபடுத்தும் விதத்தில் காட்டி, அவற்றின் வடக்குக் கடலோரப் பண்ணைகளில் பணிபுரியவும், நிபுணத்துவ ஆலோசனை வழங்கவும், இந்தத் துறையில் கடலட்டை உற்பத்தியில் தேர்ந்தவர்களான சீனர்கள் வருகின்றார்கள் என்று இங்கு நாடகமாடப்படுவதும் பரகசியங்கள்தாம்.

இந்தியா மீதான தனது வல்லாதிக்கத்தை நிலைநிறுத்துவதற்கு தமிழர்களின் வடக்குத் தாயகத்தை சீனா பயன்படுத்த அனுமதிப்பது தமிழர்களைப் பொறுத்தவரை மிக மோசமான அழிவு நடவடிக்கைக்கான ஏற்பாடாகும். இந்தோ-சீன வல்லாதிக்கப் போட்டிக்கு வடக்கு இலங்கையைக் களமாக்க இடமளிக்கக் கூடாது; இடமளிக்கவும் முடியாது.


அதுவும் இந்தியாவும் குறிப்பாக, தமிழகத்தவர்களும் இலங்கையின் வடக்கு, கிழக்கு தமிழ் மக்களும் தொப்புள் கொடி உறவு போன்றவர்கள். மொழி, மதம், இனம், பண்பாட்டுக் கோலங்கள், கலாசார விழுமியங்கள் போன்றவற்றில் இலங்கைத் தமிழர்களுக்கு தென்னிலங்கை பௌத்த சிங்களவர்களை விட, இந்தியர்களே குறிப்பாக, தமிழகத்தவர்களே மிக முக்கியமானவர்கள், நெருக்கமானவர்கள், இரத்த உரித்துகள்.

அத்தகைய இந்திய சகோதரர்களுக்கு எதிராக வல்லாதிக்க அடக்குமுறை போட்டிக்கு, போருக்கு தமிழரின் தாயகத்தை சீன தரப்பு பயன்படுத்த இடமளிப்பது மிக மோசமான செயற்பாடாகும். தமிழர் தாயகத்தின் மீதான தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை மறுக்கப்பட்டதும் இயல்பாகவே சீனர்களுடன் ஒட்டி உறவாடி நெருங்கி நிற்கும் சிங்களத்திடம் வடக்கு இலங்கை உட்பட்ட தமிழர் தாயகத்தின் ஆளுகையும் வீழ்ந்து கிடப்பதும் பௌத்த, சிங்களப் பேரினவாத வெறிப்போக்குடனும், எதேச்சாதிகார மேலாதிக்க சிந்தனையுடனும் அந்த ஆட்சி அதிகாரத்தை சிங்களம் கொண்டுசெல்வதும்

ஒத்த நிலைப்பாட்டில் இருக்கும் ஈழத் தமிழர்களும் அவர்களின் இரத்த உறவுகளான இந்தியர்களும் இன்று இந்த ஆபத்து நெருக்கடியை எதிர்கொள்ளக் காரணங்களாகும்.

தமிழர் ஆயுதப் போராட்டத்திற்கு உதவிகளைச்செய்து, பின்னர் அந்தப் போராட்டத்தை தோற்கடிக்கச்செய்து இப்போது கையறு நிலையில் இருக்கும் இந்தியாவை பார்த்து எதைச் சொல்ல? எப்படிச் சொல்ல ?இலங்கையுடன் கொண்ட கூட நட்பு இந்தியாவிற்கு கேடாய் முடிந்துகொண்டிருக்கிறது.

# ஊடகவியலாளர் நிமலராஜன் கொலையுண்டு 22 ஆண்டுகள்



மயில்வாகனம் நிமலராஜன் யாழ்ப்பாணத்தை தளமாகக்கொண்டு இயங்கிய முன்னணி ஊடகவியலாளர் ஆவார். 2000ஆம் ஆண்டு ஒக்டோபர் 19 அன்று, இவர் இலங்கை இராணுவத்தின் அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்குள் ஆயுததாரி ஒருவரால் சுட்டுக் கொலைசெய்யப்பட்டார்.

போர்ச்சூழல் நிலவும் யாழ்ப்பாணத்தில் இருந்து நிமலராஜன் பல செய்தி நிறுவனங்களுக்கு செய்திகளை வழங்கி வந்தார். அவற்றுள் பி.பி.சியின் தமிழ் மற்றும் சிங்கள சேவைகளும், வீரகேசரி நாளேடு, ராவய நாளேடு என்பனவும் முக்கியமானவையாகும். நிமலராஜன் யாழ்ப்பாணத்தில் இருந்து நடுநிலையான செய்திகளை வழங்கி வந்த வெகு சிலரில் ஒருவராவார்.

கொலையாளிகள் அவரது வீட்டின் ஜன்னல் ஊடாக துப்பாக்கியால் சுட்டனர். நிமலராஜன் தான் எழுதிக் கொண்டிருந்த கட்டுரை மேலேயே தனது உயிரை விட்டார். கொலையாளிகள் வீட்டு வளாகத்தை விட்டு வெளியேறும்போது கைகுண்டு ஒன்றையும் வீட்டுக்குள் வீசிவிட்டுச் சென்றனர். இத்தாக்குதல் யாழ்ப்பாண நகர மத்தியில் அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்குள் இராணுவ ஊரடங்குச் சட்டம் இயங்கும் வேளையில் நடைபெற்றது.

இத்தாக்குதலில் நிமலராஜனின் தந்தை சங்கரப்பிள்ளை மயில்வாகனம் (65), தாய் லில்லி மயில்வாகனம் (62), மருமகன் ஜெகதாஸ் பிரசன்னா (11) ஆகியோரும் கடுமையான காயங்களுக்கு உள்ளானார்கள்.

1983ஆம் ஆண்டு இனக்கலவரத்தில் தாக்குதலுக்குள்ளான தமிழ் மக்களில் நிமலராஜனும் அவரது குடும்பத்தினரும் அடங்குகின்றனர். அரசாங்க அச்சகத்தில் பணியாற்றிய அவரது தந்தை இடதுசாரிக் கொள்கைளைக் கொண்ட தொழிற்சங்கவாதியாவார்.

கொழும்பில் குடியிருந்த நிமலராஜனும் அவரது குடும்பத்தினரும் வீட்டைவிட்டு வெளியேறி இரண்டு வாரங்கள் அகதி முகாமில் தங்கியிருந்த பின்னரே யாழ்ப்பாணத்திற்குச் சென்றனர். 1983ஆம் ஆண்டு ஜூலை இனவாதத் தாக்குதலில் உயிர் தப்பிய தமிழர்கள் பலர் வடக்கு-கிழக்கிற்கு அனுப்பப்பட்டனர். சில வருடங்கள் சென்ற பின்னர் நிமலராஜன் வடபகுதி தமிழ் மக்கள் அனுபவிக்கும் துயரங்களை ஊடகவியலாளர் என்ற வகையில் எடுத்துரைத்தார்.

வடபகுதி மக்கள் தொடர்பாகவும் அங்கு இடம்பெற்ற, இடம்பெறும் சம்பவங்கள் தொடர்பான விடயங்களிலும் நிமலராஜன் முக்கிய இடத்தை வகித்தார். தனக்குத் தெரிந்த சகல தகவல்களையும் மறைக்காது வெளியிடுவது அவரது இயல்பாக இருந்தது. அவர் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக செயல்பட்டார். அதை அவர் தனது கடமையாக ஏற்றுக்கொண்டிருந்தார்.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் துயரங்களை சிங்கள மக்கள் மத்தியில் கொண்டுசென்றவர் நிமலராஜன்தான். அதில் முக்கியமான நபரும் அவர்தான். செம்மணி படுகொலை தொடர்பான முழுமையான அறிக்கையை நிமலராஜன் ஊடகங்களில் வெளியிட்டார்.

நிமலராஜனின் கொலையானது தேசிய ரீதியில் மாத்திரமல்ல, சர்வதேச ரீதியிலும் பாரிய அதிருப்திக்குக் காரணமாக அமைந்தது. இந்தக் கொலை தொடர்பாக நேரடியாக அரசாங்கம் மீதே குற்றஞ்சாட்டப்பட்டது.

# உரையாடலும் உறவாடலும்...



உரையாடலும் உறவாடலும் மனித வாழ்வின் இன்றியமையாத செயல்பாடுகளாகும். மேலும், இவை மனிதர்களால் மட்டுமே இயலும் செயல்பாடுகளாகும். இந்த இரண்டு வகையான செயல்பாடுகளுமே மனித வாழ்க்கையை முன்னோக்கி நகர்த்த உதவுபவை.

இதில் உறவாடலில் வார்த்தைகளுக்கான தேவை குறைவாகவோ, சில நேரங்களில் இல்லாமலோ கூட இருக்கலாம். ஆனால், உரையாடல் வார்த்தைகளைக் கொண்டே அமையும்.

இவை மேற்கொள்ளப்படும் இடங்களை ஒட்டி ஆழமானதாகவோ, மேம்போக்கானதாகவோ அமையும். மனித சமூகத் திரளில் நாம் புழங்கும்போது ஒவ்வொருவருக்கும் கிடைக்கக்கூடிய நேரம், அவர்களோடு நமக்குள்ள நெருக்கம், தேவை போன்ற காரணிகள் இவற்றைத் தீர்மானிப்பதாக அமையும்.

ஒரு திருமணத்துக்குச் செல்கிறோம். அங்கு நமக்கு அறிமுகமான பலரும் வந்திருக்கின்றனர். அனைவருடனும் நம்மால் பேசிக்கொண்டிருக்க இயலாது. கிடைக்கும் நேரத்தில் திருமணத்தில் கலந்துகொண்டு நம் கடமையை நிறைவேற்றவே நேரம் போதுமானதாக இருப்பதில்லை. அது போலவே பலரும் இருக்கும் இடத்தில் ஒரு சிலருக்கு மட்டும் முக்கியத்துவம் தரவேண்டியதாக அமைந்துவிடும். அவ்வளவு பெரிய மனிதத் திரளிலும் நாம் நம்மையறியாமலே திறமையாக செயல்படுகிறோம்.

அறிமுகமான அனைவருக்கும் ஒரு புன்னகையை அளித்து விடுவோம். ஓரிருவருடன் சில வார்த்தைகள் பேசுவோம். சிலருடன் கையை அசைத்து நலமா என நாம் வினவ அவர்களும் தமது கையை அசைத்து நலமே என்பர். அது போலவே மற்றவர்கள் நம்மைக் கேட்க நாம் சைகையால் பதிலளிப்போம். நமக்கிருக்கும் நேர நெருக்கடி, அங்குள்ள சப்தமான சூழலில் இவைதான் சாத்தியம்.

இது போலவே தினமும் பணிக்குச் செல்லும்போது எதிர்ப்படும் நண்பர்களைக் கண்டுகொண்டவாறே சிறு புன்னகையுடன் கடப்போம். சிலர் வணக்கம் செய்ய நாமும் வணக்கம் செய்துகொண்டே கடப்போம். இவ்வாறான செயல்பாடுகள் உறவாடலில் அடங்கும். அதாவது இவர்களது நட்பும் உறவும் நமக்கு வேண்டும். அதனை அவ்வப்போது புதுப்பிப்பதற்கான வாய்ப்புகளாக இந்த எதிர்ப்படல்கள் பயன்படுகின்றன.

ஒரு கட்டத்தில் அவர்களோடு உரையாடவேண்டிய தேவை ஏற்படும்போது நம்மை நாம் அறிமுகம் செய்துகொள்ளவேண்டிய தேவையைத் தவிர்க்கவும், அவர்கள் நம்மை மறவாமல் நினைவில் வைத்துக்கொள்ளவும் இவை உதவும். இவ்வாறு சந்திக்க வாய்ப்பில்லாத நேரங்களில் நமக்கு நெருக்கமானவர்களோடு குறிப்பிட்ட கால இடைவெளியில் தொலைபேசி மூலம் பேசி தொடர்புகளை புதுப்பித்துக்கொள்ளலாம். ஒரு சமயம், நமக்கோ அவருக்கோ ஏதாவது ஒரு உதவி தேவைப்படும்போது தயக்கமின்றி ஒருவரையொருவர் கேட்க இது உதவியாக இருக்கும்.

அடுத்து நமது குடும்பம். இங்கே உறவாடலும் நடைபெறும். உரையாடலும் நடைபெறும். ஆனால், தேவையான அளவுக்கு மட்டுமே உரையாடல் அமையும். உதாரணமாக ஒருவர் கடைக்குக் கிளம்புகையில் தேவையான பொருட்கள் குறித்த உரையாடல் இருக்கும். ஓரிரு பொருட்கள் தேவைப்படும் நிலையில், வாய்மொழியாக சொல்லப்படும். தேவையான பொருட்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தால் ஏற்கெனவே தயாரிக்கப்பட்ட பட்டியல் தரப்படும்.

குடும்ப உறுப்பினர்களுக்கிடையில் எந்த அளவுக்கு அதிகப் புரிதல் உள்ளதோ, அந்த அளவுக்கு குறைவான வார்த்தைகளே உரையாடலில் தேவைப்படும். பண்டிகை நாட்களில் வேறு சிலரும் இணையும் நிலையில், உரையாடலின் நீளம் மிகும். பொதுவாக வாழ்க்கை அனுபவங்களைப் பகிரும் நேரங்களாக அவை அமையும். மகிழ்ச்சியும் குதுகலமும் நிறைந்ததாக அந்த உரையாடல்கள் அமையலாம்.

இன்றைய தொலைக்காட்சி யுகத்தில் இப்படிப்பட்ட உரையாடல் குறைந்து வருவது கவலைக்குரிய விடயமே. நம் வீட்டிற்கு ஒருவர் வருகிறார் என்றால் நாம் முதலாவதாக செய்யவேண்டியது நமது வீட்டின் தொலைக்காட்சிப் பெட்டியை அணைப்பதுதான். அல்லது குறைந்தபட்சம் அதன் ஒலியையாவது முற்றிலும் குறைத்துவிட வேண்டும். இது விருந்தினர்கள் மகிழ உதவும். அது போலவே நமது கைபேசியையும் தொலைவில் வைத்துவிட்டு உரையாடுவது நல்லது.

பாடசாலைகளில் எவ்வளவுக்கெவ்வளவு உறவாடும் வாய்ப்பு ஆசிரியருக்கும் மாணவருக்கும் வாய்க்கிறதோ அந்த அளவுக்கு உரையாடலின் நீளமும் புரிதலும் மிகும். அதாவது புரிதலின் தன்மையை ஒட்டி உரையாடல் நீளவோ குறையவே செய்யும். ஆனால், அதிக மாணவர்கள் உள்ள வகுப்பறையில் உரையாடலை ஒழுங்குபடுத்துவது ஆசிரியர்களுக்கு சவாலான பணியாகும். இது போன்ற நேரங்களில் மாணவர்களிடையே குழு உரையாடல் நடைபெற ஏற்பாடு செய்யலாம்.

இது ஆசிரியர்களின் வேலைப்பளுவைக் குறைப்பதோடு, மாணவர்கள் இயல்பான மொழியில் உரையாட வாய்ப்பளிக்கும். இது மாணவர்கள் பயமின்றி கற்றலில் முன்னேற்றம் அடையவும் உதவும். அறிமுகமில்லாதோரிடமும் அவ்வப்போது சிறு சிறு உரையாடல்கள் நிகழக்கூடும். ஓரிடத்திற்கு வழி கேட்க, குறிப்பிட்ட எண் பேருந்து வருமா என்பதை அறிய, போன்றவை இப்படிப்பட்டவை.

உரையாடல்கள் பல நேரங்களில் விவாதங்களுக்கும் இட்டுச் செல்லும். உரையாடல் எப்போது விவாதமாக மாறுகிறதோ, அப்போதே விவாதிப்பவர் தன்னிலை மறக்காமல் தனது தரப்பு நியாயங்களை எடுத்து வைக்கலாம். இப்படிப்பட்ட நேரங்களில் உரையாடுவோரில் யாராவது ஒருவருக்காவது விட்டுக்கொடுக்கும் மனநிலை வேண்டும்.

ஒரு கட்டத்தில் நட்பில் விரிசல் வருமென்றால் ஒவ்வொருவருக்கும் தனது கருத்தை வைத்துக்கொள்ளும் உரிமை உண்டு என்ற வகையில் உரையாடலை முடித்துக் கொள்ளலாம். நல்ல உறவாடும் நபர்களாகவும் உறவுகளின் மதிப்பை உணர்ந்தவர்களாகவும் உள்ளோர் மத்தியில் விரிசல் உருவாவதற்கான வாய்ப்பு குறைவாகவே இருக்கும்.

எது எப்படி இருந்தாலும் உரையாடலும் உறவாடலும் மனித குலத்திற்கு மட்டுமே கிட்டியுள்ள அற்புதமான வாய்ப்பு. இவை இரண்டுமே மனிதர்களின் வெற்றிக்கான படிக்கட்டுகள். இவை எந்த அளவுக்கு பொருள் பொதிந்ததாக அமைகின்றனவோ அந்த அளவுக்கு அவை தனிமனித உயர்வுக்கும் அதன் மூலம் சமூக உயர்வுக்கும் பயன்படும்.

முனைவர் என்.மாதவன்
நன்றி - தினமணி

# இன்றைய நாளில்...

* 1900 – மேக்ஸ் பிளாங்க் கரும்பொருள் கதிரியல் விதியை (பிளாங்கின் விதி) கண்டுபிடித்தார்.

* 1943 – காசநோய்க்கான இசுட்ரெப்டோமைசின் என்ற முதலாவது நுண்ணுயிர் எதிர்ப்பி மருந்து இரட்கர்ஸ் பல்கலைக்கழகத்தில் பிரித்தெடுக்கப்பட்டது.

* 1976 – சிம்பன்சி உலகின் அருகிவரும் மிருக இனமாக அறிவிக்கப்பட்டது.

* 2000 – பி.பி.சியின் யாழ்ப்பாண நிருபர் நிமலராஜன் துணை இராணுவக் குழுவினரால் படுகொலை செய்யப்பட்டார்.

* 2001 – 400 அகதிகளை ஏற்றிச்சென்ற இந்தோனேசியப் படகு கிறிஸ்மஸ் தீவில் கவிழ்ந்ததில் 146 சிறுவர்கள், 142 பெண்கள் உட்பட 353 பேர் உயிரிழந்தனர்.

* 2003 – திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் அன்னை தெரேசாவை முத்திப்பேறு பெற்றவராக அறிவித்தார்.

# நக்கல் நமசிவாயம்

*சீனாக்காரன் இலங்கையிலேயிருந்து இந்தியாவை பார்த்துக்கொண்டிருக்கிறானாம்.. அடேய் முதலில இலங்கையை கவனிச்சு உதவுங்கோடாப்பா எண்டு அவங்களுக்கு சொல்லோணும்...*



# கொழும்பில் சட்டவிரோதமாக வாகன தரிப்புக் கட்டணம் அறவீடு

## உடனடியாக நிறுத்துமாறு சுற்றுநிருபம் வெளியீடு

நகர அபிவிருத்தி அமைச்சுக்கு சொந்தமான தெனக் கருதப்படும் நிறுவனமொன்று கொழும்பு நகரின் 19 இடங்களில் சட்டவிரோதமாக வாகன தரிப்புக் கட்டணம் அறவிட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இதனையடுத்து கொழும்பு மாநாகர சபைக் குட்பட்ட 19 வாகன தரிப்பு நிலையங்களில் வாகன தரிப்புக் கட்டணம் அறவிடுவதை நிறுத்துவது தொடர்பான சுற்றுநிருபமொன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட எல்பிரட் பிரதேசத்திலிருந்து வெள்ளவத்தை நகரசபையூடான காலி வீதி, டுப்ளிகேஷன் வீதி மற்றும் அதனுடன் தொடர்புடைய உள்வீதி, மெலே வீதி, ஜாவத்தை வீதி, தெமட்டகொடை சுப்பர் மார்க்கட், லொன்ட்ரீ வத்தை, டீ.எஸ்.பொன்சேக்கா மாவத்தை, பெஸ்டியன் மாவத்தை, முத்தையா வீதி, ஆதிவால் வீதி, மெகசின் வீதி, ஆனந்தா கல்லூரியை அண்மித்த பன்சல வீதி, ஜயந்த வீரசேகர மாவத்தை, கீழ் செத்தம் வீதி, மொஹம்மட் சேன் வீதி, முதலாம் குறுக்குத் தெரு, கிவ் வீதி, டோசன் வீதி, முதலிகே மாவத்தை, கிரிஷ்டி பெரேரா மாவத்தை உள்ளிட்ட பகுதிகளில் மீள் அறிவித்தல் வரை வாகன தரிப்புக் கட்டணம் அறவிடப்படுவது நிறுத்தப்பட்டுள்ளது.

இருந்தபோதிலும் மேற்குறித்த இடங்களில் மீண்டும் பணம் வசூலிக்கப்படுகின்றமை தெரிய வந்துள்ளது.

''அது எங்களுக்குத் தெரியாது. எங்களின் தலைவர் எங்களுக்கு காசு சேகரிக்க கட்டளையிட்டுள்ளார். நாங்கள் காசு சேகரிப்போம். ஏதாவது இருந்தால் எங்களின் தலைவரிடம் கேட்டுக்கொள்ளுங்கள்'' - இவ்வாறு பணம் சேகரிக்கும் ஒருவர் தெரிவித்தார்.

இவ்வாறு பணம் சேகரிப்பவர், கொழும்பு மாநாகர சபையின் ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர் எம்.எச்.எம்.நௌபர் என தெரியவந்துள்ளது.

இதுதொடர்பில் நௌபரிடம் கேட்டபோது,


என்னுடைய பெயரை பயன்படுத்தி யாரோ ஒருவர் இந்த வேலையை செய்துவருகிறார். இவ்விடயம் குறித்து நான் அறிந்தேன். இதுதொடர்பில் தேடிவருகிறேன். மாநகர சபை குறித்து குரல் கொடுப்பதால் என் பெயருக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் இவ்வாறான செயலில் ஈடுபட்டுள்ளனர் - என்றார்

இதுகுறித்து கொழும்பு மாநாகர சபை ஆணையாளர் எம்.பத்ராணி ஜயவர்தனவிடம் வினவியபோது,

மேற்குறித்த வாகன தரிப்பு நிலையங்களில் கட்டணம் அறவிடுவதற்காக எவருக்கும் விலைமனு கோரப்படவில்லை. பொதுமக்கள் மேற்குறித்த இடங்களில் எவருக்கும் கட்டணம் செலுத்தத் தேவையில்லை.

அவ்வாறு குறித்த இடங்களில் கட்டணம் அறவிடப்படுமானால், 0112698529 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து முறையிடலாம் என கொழும்பு மாநாகர சபை ஆணையாளர் தெரிவித்தார்.

# பேராசிரியர் அபேசிங்க ஜயக்கொடி எழுதிய தமிழ் மொழிசார்ந்த இரு நூல்கள் வெளியீடு



பேராசிரியர் அபேசிங்க ஜயக்கொடி எழுதிய தமிழ் மொழிசார்ந்த இரு நூல்களின் வெளியீட்டு விழா கொழும்பில் நாளை (20) இடம்பெறவுள்ளது.

கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சிங்கள கல்வித்துறையின் எம்.பீ.ஆரியபால கேட்போர் கூடத்தில் நாளை பிற்பகல் 02 மணிக்கு வெளியீட்டு விழா இடம்பெறும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளரும் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சிங்கள கல்வித்துறை விரிவுரையாளருமான

'தமிழ் மொழியின் எழுத்துகளும் உச்சரிப்பும்', 'தமிழ் மொழியின் எழுத்துகளும் உச்சரிப்புப் பயிற்சியும்' என்ற இரண்டு நூல்களே வெளியிடப் படவுள்ளன.




***பெவ்ரல் அமைப்பின் மாற்றத்திற்கான பாதை கற்கைநெறியின் யாழ். மாவட்ட பெண்கள் குழு நடத்திய, "போதையினால் பாதை மாறும் இளையோரை நல்வழிப்படுத்தி நற்பிரஜைகளாக உருவாக்குவோம்" எனும் தொனிப்பொருளிலான போதை ஒழிப்பு விழிப்புணர்வு செயற்பாட்டு நிகழ்வு நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை திருநெல்வேலி முத்துதம்பி இந்து மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது. திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் ஆரம்பமான நிகழ்வைத் தொடர்ந்து திருநெல்வேலி சந்தைக் கட்டிடத்தொகுதி வரை விழிப்புணர்வுப் பேரணியும் இடம்பெற்றது. (யாழ் நிருபர்)***




# அமைச்சரவை முடிவுகள்

## 2022.10.17 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்

***(அரசாங்க தகவல் திணைக்களத்தின் பிரசார பிரிவினால் சிங்கள மொழியிலான அமைச்சரவைத் தீர்மான ஆவணம், தமிழ் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.)***

**01. அரச சொத்துகள் முகாமைத்துவ சட்டமூலம்**

2022ஆம் ஆண்டு நிதி ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டத் திருத்தம் செய்வதற்காக ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்ட உரையில் பொருளாதாரத்தை திடமாகக் கட்டியெழுப்புதல், அரச சேவையை வினைத்திறனாக விருத்தி செய்தல் மற்றும் அரச வளங்களை பயனுள்ள வகையில் முகாமைத்துவம் செய்யும் நோக்கத்துடன் புதிய சட்டங்கள் சிலவற்றை அறிமுகப்படுத்தல் மற்றும் தற்போது காணப்படுகின்ற ஒருசில சட்டங்களின் ஏற்பாடுகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய தேவைகளும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

அதற்கமைய, திறைசேரியின் கீழ் காணப்படும் கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி அலுவலகத்தின் பணிகளை விரிவாக்கம் செய்து அதற்குரிய சட்ட அங்கீகாரம் வழங்குவதற்கும், தேசிய சொத்துகள் ஆவணத்தைத் தயாரிப்பதற்கும் மற்றும் அரச சொத்துகள் தொடர்பாக மையப்படுத்திய தரவுத்தொகுதியை அறிமுகப்படுத்துவதற்கும் இயலுமாகும் வகையில் பொருத்தமான ஏற்பாடுகளை உள்வாங்கி அரச சொத்துகள் முகாமைத்துவத்திற்காக புதிய சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்காக சட்டமூலமொன்றை தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்கு நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**02. ஆயுள்வேத சட்டத்தை திருத்தம் செய்தல்**

1961ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க ஆயுள்வேத சட்டம் இதற்கு முன்னர் ஒருசில சந்தர்ப்பங்களில் திருத்தம் செய்யப்பட்டுள்ளதுடன், நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு இயலுமாகும் வகையிலும் மற்றும் சமகாலத் தேவைகளுக்குப் பொருத்தமான வகையிலும் குறித்த சட்டத்தை மேலும் திருத்தம் செய்யவேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, சுதேச மருத்துவத் துறையின் மேம்பாட்டுக்காக ஆயுள்வேத திணைக்களத்தின் சேவைகளை விரிவாக்கம் செய்வதற்காக மற்றும் ஆராய்ச்சி மூலிகைப் பூங்காக்களை உருவாக்கல் போன்ற பணிகளுக்குப் பொருத்தமான ஏற்பாடுகளை உள்வாங்கி ஆயுள்வேத சட்டத்தை திருத்தம் செய்வதற்காக சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**03. குத்தகை அடிப்படையில் வழங்கப்படும் வளாகங்களின் உடமையை மீளப் பெற்றுக்கொள்ளும் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்**

குத்தகை அடிப்படையில் வழங்கப்படும் வளாகங்களின் உடமையை மீளப் பெற்றுக்கொள்ளும் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்திற்குப் பதிலாக புதிய சட்டமொன்றை விதிப்பதற்காக சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்காக 2021 செப்டெம்பர் மாதம் 27ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்திற்கு சட்ட மா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது. குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும் பின்னர் நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. பங்கேற்பு ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்காக ஜன சபை முறைமையை நிறுவுவதற்காக தேசிய ஜன சபை தேசிய செயலகத்தை தாபித்தல்**

இலங்கையில் இதுவரை நடைமுறையிலுள்ள பிரதிநிதித்துவ ஜனநாயகக் கட்டமைப்பின் மூலம் மக்களின் உண்மையான பிரச்சினைகள் போதியளவு விழித்துக் கூறப்படாமையால், இம்முறைமையில் ஆட்சி மையம் மற்றும் மக்களுக்கும் இடையில் காணப்படுகின்ற தொடர்புகள் விலகிச்சென்று கொண்டிருப்பதால், கொள்கைத் தீர்மானங்களை எடுக்கின்ற செயன்முறையில் பொதுமக்களின் கருத்துகளுக்கு போதுமானளவு செவிமடுக்காமையாலும், அது தொடர்பாக சமூகத்தில் விமர்சனங்களும் உருவாகி வருகின்றமையாலும், குறித்த விமர்சனங்களின் அடிப்படையில் சமூகத்தில் பிரதிநிதித்துவ ஜனநாயகத்திற்கு எதிரான கருத்துகள் மற்றும் எதிர்ப்புகள் உருவாகின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

இந்நிலையில் கிராமியமட்டத்தில் பங்கேற்பு ஜனநாயகப் பண்புகளுடன் இயங்குகின்ற நிறுவனக் கட்டமைப் பொன்றில், அரச அலுவலர்களும் மற்றும் பொதுமக்களும் இணைந்து கிராமத்திலுள்ள பிரச்சினைகளைக் கலந்துரையாடக் கூடிய, அபிவிருத்தி முன்னுரிமைகளைத் தீர்மானிக்கக்கூடிய மற்றும் கிராமிய மக்களுக்கு தீர்மானமெடுக்கின்ற செயன்முறையில் பங்கேற்கக்கூடிய பலம்வாய்ந்த பொறிமுறையொன்று தேவையாகும்.

அரச கொள்கை வகுப்புக்காக மக்களுக்கு தமது கருத்துகளை முனைப்பாக வழங்கக் கூடியதாக இருக்கின்ற மற்றும் சமூகப் பங்கேற்புடன் குறித்த கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு இயலுமாகும் வகையிலான ஏற்பாடுகள் அடங்கிய பொறிமுறையின் மூலம் அதிகாரிகள்வாதம் மற்றும் தன்னிச்சையான அரசியல்மயப்படுத்தல் மூலம் நிகழக்கூடிய பொதுமக்கள் அழுத்தங்களைப் பயனுள்ள வகையிலும் வினைத்திறனாகவும் தடுப்பதற்கு இயலுமாகும். அதற்கமைய, அரச கொள்கை வகுப்பு மற்றும் குறித்த கொள்கையை வெற்றிகரமாக அமுலாக்குவதற்காக பொதுமக்களின் பங்கேற்புடன் பெற்றுக்கொள்ளக்கூடிய சுயாதீன நிறுவனக் கட்டமைப்புடன் கூடிய நியாயமான சமூகத்திற்கான தேசிய இயக்கத்தின் தலைமையில் ஜன சபை முறைமை தொடர்பான கொள்கைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த கொள்கைப்பத்திரத்தின் மூலம் நாட்டிலுள்ள அனைத்து கிராம அலுவலர் பிரிவுகளையும் உள்ளடக்கியதாக கிராமிய ஜன சபை நிறுவுவதற்கும், தேசிய மட்டத்தில் தேசிய ஜன சபை நிறுவுவதற்கும் முன்மொழியப்பட்டுள்ளது. குறித்த கொள்கைப்பத்திரத்தின் மூலம் முன்மொழியப்பட்டுள்ள ஜன சபை முறைமை அரசானது அடிப்படைக் கொள்கையாக ஏற்றுக்கொள்வதற்கும், ஜன சபை முறைமை நிறுவுவதற்காக தேசிய மட்டத்தில் சுயாதீன கேந்திர நிறுவனமாக தேசிய ஜன சபை செயலகம் தாபிப்பதற்கும் ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. நல்லிணக்கம் தொடர்பாக அமைச்சரவை உபகுழுவொன்று நியமித்தல்**

இலங்கையில் வாழும் பல்லின மக்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதற்காக மற்றும் வடக்கு, கிழக்கு மோதல்களின் பின்னர் மீள்குடியமர்த்தல், காணி மற்றும் காணாமல்போன ஆட்கள் பற்றி மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதற்காக ஜனாதிபதியின் தலைமையில் மற்றும் கீழ்க்குறிப்பிட்டுள்ள அங்கத்தவர்களுடன் கூடியதாக நல்லிணக்கம் தொடர்பான அமைச்சரவை உபகுழுவை நியமிப்பதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தினேஷ் குணவர்தன - பிரதமர்
டக்ளஸ் தேவானந்தா - கடற்றொழில் அமைச்சர்
விஜயதாச ராஜபக்ஷ - நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்
அலி சப்ரி - வெளிவிவகார அமைச்சர்

## 18.10.2022 நாணய மாற்று வீதம்

ශ්‍රී ලංකා මහ බැංකුව / இலங்கை மத்திய வங்கி / CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 113 43 1 | 124 2875 |
| கனேடியன் டொலர் | 15 3682 | 161 3 66 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 38 0074 | 41 0377 |
| யூரோ | 240 6548 | 255 6 7 |
| ஜப்பான் யென் | 1 3 14 | 1 4 45 |
| சிங்கப்பூர் டொலர் | 140 7524 | 151 4 3 |
| ஸ்ரேலிங் பவுன் | 3 5 6584 | 311 5474 |
| சுவிஸ் பிராங்க் | 247 3202 | 264 8432 |
| ஐ.அ.டொலர் | 25 3 73 | 26 8205 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 852 7 77 |
| குவைட் | குவைட் தினார் | 0,060 4022 |
| ஓமான் | ஓமான் றியால் | 832 6840 |
| கட்டார் | கட்டார் றியால் | 88 6706 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 548 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 82 0 |

திகதி 17.10.2022 திங்கட்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம்: 4911
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,477,940.00
ஆங்கில எழுத்து A வெற்றி இலக்கங்கள் 6 0 3 7 6 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 28,392,268.00

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3153
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,981,560.00
ஆங்கில எழுத்து M வெற்றி இலக்கங்கள் 15 44 48 66
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 83,016,711.20

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1366
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 1,678,160.00
வெற்றி இலக்கினம் துலாம் வெற்றி இலக்கங்கள் 6 2 5 6 8 4
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,438,971.60

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 941
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,400,000.00
வெற்றி இலக்கினம் C வெற்றி இலக்கங்கள் 26 54 59 73
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 130,226,520.80

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 220
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 6,898,300.00
இலக்கினம் துலாம் வெற்றி இலக்கங்கள் 09 47 55 60 விசேட இலக்கினம் துலாம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,766,983.20

கோடி 27 + Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1259
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,143,140.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 276,454,694.00
J 23 14 16 44 66
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 Email : info@nlb.lk
பெக்ஸ்: 011-4669475 Web : www.nlb.lk

# பல்வேறு வேலைவாய்ப்புகளை பூர்த்திசெய்ய மாபெரும் தொழிற்சந்தை நடத்த ஏற்பாடு

## யாழ். அரச அதிபர் மகேசன் தெரிவிப்பு



(யாழ். நிருபர்)

யாழ். மாவட்டத்தில் பல்வேறு வேலைவாய்ப்புகளை பூர்த்திசெய்யக்கூடிய வகையில், மாபெரும் தொழில் சந்தை நிகழ்வு நடைபெறவுள்ளதாக மாவட்ட அரச அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகமும் மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களமும் இணைந்து மாவட்ட செயலகத்தில் ஒக்டோபர் 22ஆம் திகதி சனிக்கிழமையன்று மாபெரும் தொழிற்சந்தையை நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

மனிதவலு வேலைவாய்ப்புத்திணைக் களத்தில் சுமார் பத்தொன்பதாயிரத்துநூற்றுநாற்பத்தேழு பேருக்கு மேற்பட்ட தொழில் தேடுபவர்கள் பதிவுசெய்துள்ளனர். அவர்களுக்கு இந்த வேலைவாய்ப்பைப் பெற்றுக்கொடுப்பதற்கும் தொழிற்சந்தைக்குரிய தங்களுடைய கற்கை நெறிகளை பயில ஆர்வம் உள்ளவர்களுக்கு அந்த பயிற்சிநெறியை ஏற்படுத்தும் நோக்கிலும் இந்தத் தொழில் சந்தை நிகழ்வு நடைபெறுகிறது.

குறிப்பாக, தனியார் உற்பத்தி நிறுவனங்கள், சந்தைப்படுத்தல் துறை, ஹோட்டல் துறை கணக்கியல் துறை, காப்புறுதித் துறை, ஆடைத் தொழிற்சாலைகள், பாதுகாப்பு சேவை, தாதியர் சேவை மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் போன்ற விடயங்களை உள்ளடக்கி சுமார் 40இற்கும் மேற்பட்ட தொழிற்றுறை நிறுவனங்களும் பயிற்சிநெறி நிறுவனங்களும் பங்கேற்றவுள்ளன.

தொழிற்பயிற்சி பாடநெறிக்கான கணினித்துறை தாதிய பயிற்சிநெறி, ஏனைய தொழில்பயிற்சி நிறுவனங்கள், கப்பல்துறை தொழில்வாய்ப்பு மற்றும் அதற்கான தொழிற்பயிற்சி மற்றும் ஹோட்டல் முகாமைத்துவத்தில் போன்ற பயிற்சிநெறிகள் தொடர்பான நிறுவனங்கள் கலந்துகொள்ளவுள்ளன.

தொழில் தேடுபவர்களையும் தொழில் வழங்குநர்களையும் இணைக்கும் மாபெரும் தொழிற்சந்தையாக நடத்தப்படவுள்ளது. தொழில் தேடுபவர்களையும் தொழில் வழங்குநர்களும் தங்களுடைய தேவைகளை இந்த மாபெரும் தொழிற்சந்தையில் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

இந்த மாபெரும் தொழிற்சந்தை தொழில் தேடும் இளைஞர், யுவதிகளுக்கும் தொழில் தகைமை மேலும் மேம்படுத்த ஆர்வம் உடையவர்களுக்கும் பெரிய வாய்ப்பாக அமையும் - என்றார்.

**வேலைவாய்ப்புக்காக 19 ஆயிரம் இளைஞர், யுவதிகள் காத்திருப்பு**

இதேவேளை, யாழ். மாவட்டத்தில் 19 ஆயிரத்து 147இற்கு மேற்பட்ட இளைஞர், யுவதிகள் தொழில் தேடுபவர்களாக யாழ் மாவட்ட செயலக மனிதவலு வேலைவாய்ப்பு திணைக்களத்தில் பதிவை மேற்கொண்டுள்ளனர்.

வேலையில்லாப் பிரச்சினையானது தேசிய மட்ட வேலையில்லாப் பிரச்சினைகளை விட அதிக உயர்வாகக் காணப்படுகின்றது, 21 வீதமானவர்கள் வடமாகாணத்தில் வேலையற்றவர்களாக உள்ளனரென மத்திய வங்கியின் வருடாந்த தகவல் தெரிவிக்கின்றது.

யாழில் கடந்த வருடம் 7.5 வீதமாக காணப்பட்ட வேலையற்றோர் வீதம் தேசிய மட்டத்தில் 4.5 வீதமாகக் காணப்பட்டது. எனினும், கடந்த வருடத்தை விட இந்த வருடம் வேலையற்றோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்,

# வவுனியாவில் சமுர்த்தி உத்தியோகத்தர் மீதான தாக்குதலைக் கண்டித்து கவனயீர்ப்புப் போராட்டம்



(வவுனியா நிருபர்)

வவுனியாவில் சமுர்த்தி உத்தியோகத்தர் மீதான தாக்குதலைக் கண்டித்து பிரதேச செயலக ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டமையுடன் கவனயீர்ப்புப் போராட்டமொன்றையும் மேற்கொண்டிருந்தனர்.

இந்த கவனயீர்ப்புப் போராட்டம் வவுனியா பிரதேச செயலக வாயிலின் முன்பாக நேற்று முன்தினம் காலை 11.30 மணிமுதல் 12.30 மணிவரை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

வவுனியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கந்தபுரம் கிராம சேவையாளர் அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை (12) காலை இடம்பெற்ற சமுர்த்தி கொடுப்பனவு தொடர்பான கூட்டத்தின்போது அங்கு சென்ற பொதுமகனொருவர் தனது சமுர்த்தி முத்திரை வெட்டப்பட்டமை தொடர்பில் குறித்த பிரிவு சமுர்த்தி உத்தியோகத்தருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டமையுடன் இறுதியில் சமுர்த்தி உத்தியாகத்தர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவத்தில் காயமடைந்த கந்தபுரம் பிரிவு சமுர்த்தி உத்தியோகத்தர் சிவஞானசிங்கம் கபிலன் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன், தாக்குதல் மேற்கொண்ட பொதுமகனை வவுனியா பண்டாரிக்குளம் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

குறித்த சமுர்த்தி உத்தியோகத்தர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கு நீதியான தீர்வு கோரியும் வவுனியா பிரதேச செயலக ஊழியர் நலன்புரி சங்கம் மற்றும் பிரதேச செயலகத்தினரின் தலைமையில் பிரதேச செயலக வாயிலின் முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமையுடன் காலை 11.30 மணி தொடக்கம் 12.30 மணி வரை பணிப்புறக்கணிப்பிலும் பிரதேச செயலக ஊழியர்கள் ஈடுபட்டிருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் நேர்மையாகவும் சரியாகவும் கடமையாற்றும் எமது உத்தியோகத்தர்களுக்கு இடையூறு ஏற்படுத்தாதீர்கள், அரச அதிகாரிகளின் மீதான தாக்குதலை வன்மையான கண்டிக்கின்றோம், அரசாங்க சுற்றுநிருபத்திற்கிணங்க பணிபுரிவதற்கு இடமளியுங்கள் போன்ற வாசகங்கள் தாங்கிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

# போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்த பொலிஸார் நடவடிக்கை முன்னெடுப்பு

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிகரித்துள்ள போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார் இணைந்து நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளனர் – என யாழ் மாவட்ட இந்து கலாசார பேரவையின் செயலாளர் எம்.ரி. எஸ்.இராமச்சந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண ஊடக மன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வெளிநாட்டு வேலைவாய்ப்பை பெற்றுக் கொள்வதற்காக எனது கல்வி நிலையத்தில் 23 ஆயிரம் வரையானவர்கள் வெளிநாட்டு மொழியை கற்று நாட்டின் பல பகுதிகளில்




வாழ்ந்து வருகின்றனர்.

குறிப்பாக, யாழ். மாவட்டத்திலுள்ள அதிக வசதி வாய்ப்பு படைத்த இளைஞர்கள் வெளிநாட்டு போதைப்பொருட்களைப் பயன்படுத்தி தம்மையும் தமது கலாசாரத்தையும் அழித்து வருகின்றனர். எனவே, குறித்த விடயம் தொடர்பில் வடமாகாண பிரதி பொலிஸ் மா அதிபர், வடமாகாண ஆளுநர், இராணுவ தலைமை அதிகாரி உள்ளிட்டோர் தமது கல்வி நிலையங்கள் ஊடாக கருத்தமர்வுகளை ஏற்படுத்துவதன் மூலம் போதைப்பொருள் பாவனையை யாழ் மாவட்டத்தில் கட்டுப்படுத்த முடியும் – என்றார்.

போதைப்பொருளை ஒழிப்பதற்கான செயல்திட்ட கருத்தரங்குகளையும் இளைஞர், யுவதிகள் மத்தியில் எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் இதனை கருத்திற்கொண்டு அனைவரும் போதையற்ற நாட்டை உருவாக்க முன்வர வேண்டும் என்றும் இதன்போது கேட்டுக்கொண்டார்.

# போதைப்பொருளுடன் நால்வர் யாழில் கைது

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் அரசடி பகுதியில் ஊசி மூலம் ஹெரோயின் போதைமருந்தை ஏற்றிக் கொண்டிருந்த நால்வர் 2 கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் நேற்று முன்தினம் திங்கட்கிழமை யாழ். மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸ்பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டுள்ளவர்களில் இருவருக்கு ஏற்கனவே யாழ். மாவட்டத்திலுள்ள நீதவான் நீதிமன்றுகளால் திறந்த பிடியாணைகள் ஐந்து காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் தாங்கள் பளை பகுதியைச் சேர்ந்த ஒருவரிடமிருந்தே போதைப்பொருட்களை பெற்றுக்கொள்வதாக ஆரம்பகட்ட விசாரணையில் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்கள்.

கைதுசெய்யப்பட்டவர்களை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைத்து விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# மின்சாரம் தாக்கி பலியான கனவரல்லை தோட்டத் தொழிலாளியின் குடும்பத்துக்கு ரூ.15 இலட்சம்








(எம். செல்வராஜா)

கனவரல்லை பெருந்தோட்ட ஈ.ஜி.கே. பிரிவில் மின்சாரம் தாக்கி பலியான தமிழரசன் கணேசமூர்த்திக்கு இழப்பீடு வழங்குவது தொடர்பான பேச்சுவார்த்தைகள் பதுளை உதவித்தொழில் ஆணையாளர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (17) மாலை நடைபெற்றது.

பதுளை உதவித் தொழில் ஆணையாளர் தலைமையில் இடம்பெற்ற இப்பேச்சுவார்த்தையில், இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்க மாநில இயக்குனர் எஸ்.முத்துகுமார், இணைப்பாளர் ஜி.ஜெயச்சந்திரன் மற்றும் தோட்டமட்டத் தலைவர்கள் ஆகியோர் மரணமடைந்த தமிழரசன் கணேசமூர்த்தி சார்பாகவும் தோட்டக் கம்பனியான நமுனுகலை பிளான்டேசன் சார்பாக தோட்ட முகாமையாளரும் கலந்துகொண்டிருந்தனர்.

இப்பேச்சுவார்த்தையின்போது தோட்ட முகாமையாளர் மரணமான தமிழரசன் கணேசமூர்த்திக்கு இழப்பீடாக 15 இலட்சம் ரூபா பணத்தை வழங்க தீர்மானித்திருப்பதாகக் கூறினார். ஆனாலும் இழப்பீட்டுத் தொகையினைப் பெற்றுக் கொள்வதற்கு மரணமானவரின் குடும்பத்தினர் எவரும் சமுகமளிக்கவில்லை.

மேலும், மரணமானவரின் குடும்பத்தினர் ஒருவருக்கு தோட்ட கள உத்தியோகத்தர் பதவியை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது.

தோட்ட முகாமையாளரின் பொறுப்பில் இழப்பீட்டுத் தொகை இருப்பதால் மரணமானவரின் குடும்பத்தினர் அத்தொகையைப் பெற்றுக்கொள்ள முடியுமென்றும் அறிவிக்கப்பட்டது.

தொழிற்சங்க மாநில இயக்குனர் எஸ்.முத்துக்குமார் கருத்துத் தெரிவிக்கையில்,

"எம்மால் முடிந்ததை இழப்பீடாகப் பெற்றுக்கொடுக்கவுள்ளோம். இதனைவிட கூடுதலாக இழப்பீடுகளைப் பெற்றுக்கொடுக்க எவரும் முன்வருவார்களேயானால் அதனை நாம் வரவேற்போம்'' - என்றார்.



**தங்ககல இலக்கம் (1) தமிழ் மகா வித்தியாலயத்தின் ஆசானும், அகில இலங்கை சமாதான நீதிவானும், மலையகத்தின் சிறந்த குறுந்திரைப் பட நடிகரும் மும்மொழிகளிலும் வர்ணனை செய்யக்கூடிய சிறந்த நிகழ்ச்சி தொகுப்பாளருமான ஷான் சதீஷுக்கு அகில இலங்கை கிராமிய கலை ஒன்றியம் 2022 விருது வழங்கும் விழாவில் 'கலாரத்ன விபூசண்' விருது கிடைத்துள்ளது.**

# அஞ்சல் தினத்தினை முன்னிட்டு நுவரெலியா பிரதான தபாலகத்தில் இரத்ததான முகாம்



(செ.திவாகரன்)

ஒக்டோபர் 9ஆம் திகதி 148ஆவது உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு நுவரெலியா பிரதான அஞ்சலகத்தால் நான்காவது முறையாக இரத்ததான முகாமொன்று நேற்று (18) முன்னெடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிராந்திய தபால் கண்காணிப்பாளர் எச்.பி.என்.ஜி.குணரத்தின, நுவரெலியா தபாலக அதிபர் சந்திக்க அமரகோன் ஆகியோரின் பங்குபற்றுதலோடு இடம்பெற்ற நிகழ்வில் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையின் இரத்த வங்கி பிரிவுக்குட்பட்டவர்கள் இரத்தங்களை சேமிக்க வருகைதந்திருந்தனர்.

ஆண்டுதோறும் நடைபெறும் இரத்ததான முகாமில் அதிகளவான அஞ்சலக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் தன்னார்வாதியாக இரத்ததான முகாமில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் இரத்த வங்கியில் நிலவுகின்ற இரத்த பற்றாக்குறையை நிவர்த்திசெய்யும் நோக்கில் இந்த இரத்ததானம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# மாத்தளை மாவட்ட நீரேந்து பிரதேசங்களில் நீர்மட்டம் உயர்வு

## பொதுமக்களை அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்து

(உக்குவளை நிருபர்)

தற்போது பெய்துவரும் மழை காரணமாக மாத்தளை மாவட்டத்திலுள்ள நீரேந்து பிரதேசங்களில் நீர்மட்டம் அதிகரித்திருப்பதால் அவ்விடங்களுக்கு மக்கள் நீராடச் செல்வதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு அனர்த்த நிவாரண மத்திய நிலையம் மக்களை அறிவுறுத்தியுள்ளது.

அத்துடன், மேட்டுநில தாழ்நிலப் பகுதிகளில் வாழ்வோரும் அவதானமாக இருப்பதுடன், தாம் வாழும் இடங்கள், வீடுகள், கட்டடங்களில் பள்ளங்கள், வெடிப்புகள் அவதானிக்கப்பட்டால் அதுபற்றி சம்பந்தப்பட்ட துறையினருக்கு அறிவிப்பதோடு, அவ்வாறான இடங்களிலிருந்து மக்களை பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறும் அறிவுறுத்தியுள்ளது.

# ஏற்றுமதி தொழில்முனைவோருக்கு வசதியை ஏற்படுத்திக் கொடுத்தால் வருமானத்தை அதிகரிக்கலாம்

## மத்திய மாகாண ஆளுநர் தெரிவிப்பு





(கண்டி நிருபர்)

புதுமையான ஏற்றுமதித்துறைகளைக் கண்டறிந்து, ஏற்றுமதி தொழில்முனைவோருக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்துவதன் மூலம், தற்போதுள்ள ஏற்றுமதியை மூன்று மடங்காக அதிகரிக்க வாய்ப்புள்ளது - என மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தெரிவித்தார்.

கண்டி, கெட்டம்பே ஓக்-ரே-ஹோட்டலில் இடம்பெற்ற நிகழ்வொன்றின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

புதுமையான ஏற்றுமதித் துறைகளைக் கண்டறிந்து, ஏற்றுமதி தொழில்முனைவோருக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்துவதன் மூலம், தற்போதுள்ள ஏற்றுமதியை மூன்று மடங்காக அதிகரிக்க வாய்ப்புள்ளது.

ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின் தரத்தை உறுதிப்படுத்துவதால், உலகளாவிய ரீதியில் இலங்கை உற்பத்திகள் மீது நுகர்வோர் நம்பிக்கை வைப்பதற்கு உதவும். மாகாணத்தில் கிடைக்கும் பௌதீக, பொருளாதார, மனித மற்றும் அறிவு வளங்களை முறையாகப் பயன்படுத்துவதன் மூலம் ஏற்றுமதி நிறுவனங்களின் நிலையான அபிவிருத்தியை ஏற்படுத்தலாம் - என்றார்.

மத்திய மாகாண பிரதம செயலாளர் காமினி ராஜரத்ன, கைத்தொழில் அமைச்சின் செயலாளர் உபாலி ரணவக்க, பிராந்திய பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவர் ஜனக சகலசூரிய, ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் பிராந்திய அதிகாரி டி.கே.ஜெயலத் மற்றும் தொழில்முனைவோர் உட்பட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# தொல்பொருள் திணைக்களத்தை வழிநடத்தும் பௌத்த பிக்குகள்

## சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. குற்றச்சாட்டு

(வவுனியா செய்தியாளர்)

வனஇலாகா, வனஜீவராசிகள், மகாவலி, தொல்பொருள் திணைக்களம் இந்த நான்கும் அமைச்சரின் கட்டுப்பாட்டில் இல்லை. தொல் பொருள் திணைக்களத்தை ஒருசில பௌத்த பிக்குகள்தான் வழிநடத்துகின்றனர் - என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை 1970ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. அது முழுமையாக தமிழர்களது இன விகிதாசாரத்தை இல்லாதொழிப்பதற்காக உருவாக்கப்பட்டது. அதனை எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். 1988ஆம் ஆண்டு மகாவலி எல் வலயம் வர்த்தமானி பிரசுரம் செய்யப்பட்டு இன்று 34 வருடங்கள் முடிந்திருக்கின்றன. அதில் வவுனியா, முல்லைத்தீவு உள்ளடங்கலாக பல பிரதேசங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன. அவர்களது தங்களது செயற்பாட்டின் காரணமாக வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களில் உள்ள விவசாய நிலங்களை அபிவிருத்தி என்ற போர்வையில் தென்பகுதி மக்களுக்கு வழங்கும் செயற்பாடு தொடர்ந்தும் நடைபெறுகிறது. மகாவலி எல் வலயத்தால் இந்த இரண்டு மாவட்டங்களில் ஒரு தமிழருக்குக்கூட காணி வழங்கப்படவில்லை. எனவே, மகாவலி அதிகாரசபையின் செயற்பாடுகள் தொடர்பாக மிகவும் கவனமாக இருக்கவேண்டும்.

தற்போது ஒரு சாதகமான நிலை உள்ளது. கடந்த காலங்களில் விவசாய அமைச்சர் ஒருவராக இருப்பார். வனஇலாகா, வனஜீவராசிகள் அமைச்சர் வேறு ஒருவராக இருப்பார். ஆகவே, சில விவசாயி களின் பிரச்சினையில் இரண்டு அமைச்சுகள் தொடர்புபட்டிருநக்கும். தற்போது



ஒரே அமைச்சர். விவசாயம், வனஇலாகா அமைச்சர் இரண்டும் ஒருவரே. அமைச்சர் மகிந்த அமரவீரவே அவர். அதுவும் எப்ப மாறுதோ தெரியாது. விவசாயிகளின் கோரிக்கையை ஒரு குழுவாக கொண்டுசெல்லும் போது எமக்கு ஒரு சாதகம் இருக்கிறது. அவர் ஒருசில விடயங்களை பரிசீலிக்கக்கூடியவர். இதற்கு ஒரு கூட்டுமுயற்சி சாதகமாக அமையும்.

விவசாயத்தையும், கால்நடையையும் பிரித்துப் பார்க்க முடியாது. இந்த விடயங்கள் தொடர்பில் ஒரு கூட்டுமுயற்சி எடுக்கவேண்டும். வனவிலங்குகளால் விவசாயத்திற்கு பாதிப்பு ஏற்படுகிறது. செட்டிகுளத்தில் இவ்வாறான அதிக பாதிப்புகள் ஏற்படுகின்றன. குரங்குகளின் தொல்லை அதிகமாகக் காணப்படுகின்றது. அத்துடன், யானைகளின் செயற்பாட்டாலும் மக்கள் வாழ்வாதாரத்தை இழக்கவேண்டியுள்ளது.

வனஇலாகா, வனஜீவராசிகள், மகாவலி, தொல்பொருள் திணைக்களம் இந்த நான்கும் அமைச்சரின் கட்டுப்பாட்டில் இல்லை. தொல்பொருள் திணைக்களத்தை ஒருசில பௌத்த அமைப்புகள்தான் வழிநடத்துகின்றன.

அமைச்சர் ஏதாவது கதைத்தால் அவரது தொகுதியிலுள்ள பிக்கு அதுபற்றி கதைக்க வேண்டாம் என்கிறாராம். ஆகவே, இன்றைய நிலமையை புரிந்துகொள்ள வேண்டும் - எனத் தெரிவித்தார்.

# வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்!

## எம்.கே.சிவாஜிலிங்கம் யாழில் கோரிக்கை

எமக்கு அரசியல் தீர்வு கிடைக்கப்பெற வேண்டும். மீள இடம்பெறாத விடயங்களை உறுதிப்படுத்தக்கூடிய விதத்தில் ஒரு சுயநிர்ணய உரிமையைப் பாவித்து, எங்கள் தமிழ் இனம் சர்வதேச சமூகத்தின் உதவியுடன் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஒரு பொதுஜன வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை நிறுத்தி நகர வேண்டிய நிலைமை இருக்கிறது. இதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும் - என தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது,

ஜெனீவா கூட்டத்தொடர் முடிவடைந்தும் அது தொடர்பான வாதப்பிரதிவாதங்கள் இதுவரை முடிந்தபாடாக இல்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக கருத்து கூறிக்கொண்டிருக்கிறார்கள்.

2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்த பின்னர் 2012ஆம் ஆண்டிலிருந்து அமெரிக்காவினால் 19இன் கீழ் 1 என்ற தீர்மானம் கொண்டுவரப்பட்டதிலிருந்து இன்று 51கீழ் இ என்ற 2022 செப்டெம்பர் வரை தீர்மானங்கள் வந்திருக்கின்றன.

இந்தச் சூழ்நிலையில்தான் ஈழத்தமிழர்களைப் பொறுத்தமட்டில் பிரதானமான 2 இலக்குகள் இருக்கின்றன. இனப்படுகொலை உட்பட சர்வதேச குற்றங்களுக்காக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் குற்றவாளிகள் நிறுத்தப்பட வேண்டும்.

எமக்கு அரசியல் தீர்வு கிடைக்கப்பெற வேண்டும் என்பதை எதிர்பார்க்கின்றோம். மீள இடம்பெறாத விடயங்களை உறுதிப்படுத்தக்கூடிய விதத்தில் ஒரு சுயநிர்ணய உரிமையைப் பாவித்து எங்கள் தமிழ் இனம் சர்வதேச சமூகத்தின் உதவியுடன் வடக்கு, கிழக்கு மாநிலத்திலே ஒரு பொதுஜன வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை நிறுத்தி நகர வேண்டிய நிலைமை இருக்கிறது. இதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டும்.

எதுவுமே இல்லை என்று சொல்லிக்கொண்டு இருக்காமல் ஈழத்தமிழர்க்ள தரப்பிலே நாங்கள் அதை கேட்கக்கூடிய விதத்தில் மாற வேண்டும்.

தமிழ்த் தேசிய 3 அணிகளில் 13 எம்.பிக்கள் இருந்தால் அதில் 5 பேர்தான் கேட்டிருந்தார்கள். 13 பேரில் 7 பேர் இருக்கிறார்கள், 6 பேர் அடுத்த பக்கத்தில் என்ன நிலைமையில் இருக்கிறார்கள் என்ற கேள்வி இருக்கிறது.

இலங்கை தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த சம்பந்தன், சுமந்திரன், சாணக்கியன், கலையரசன் ஆகியோரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்தவர்களாகிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் ஆகியோரும் இதுவரை பொதுஜன வாக்கெடுப்பைப் பற்றி கூறாமல் இருக்கிறார்கள். இந்த விடயம் விரைவுபடுத்தப்பட்டு முன்னெடுக்கப்பட வேண்டும்.

காணாமலாக்கப்பட்டவர்களின் பிரச்சினைகள் உட்பட அத்தனை பிரச்சினைகளுக்கும் சர்வதேச விசாரணைகள் மூலம் தீர்வு கிடைக்க வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம். இதற்கு ஆதரவாக வாக்களித்த 20 நாடுகளுக்கும் நன்றி தெரிவிக்கின்ற அதேநேரத்தில் எதிராக வாக்களித்த 7 நாடுகளுக்கும் எங்களுடைய நியாயங்களை சொல்லவேண்டிய கடமைப்பாடு இருக்கிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போராட்டங்களில் சிறுவர்களை கேடயங்களாக பயன்படுத்த வேண்டாம் என்ற கோரிக்கையை



வைத்திருக்கிறார்.

பினிக்ஸ் பறவைபோல் சாம்பல் மேட்டிலிருந்து மீள எழுவோம் என்ற தொனிப்பொருளில் களுத்துறையில் ஆரம்பித்து தற்போது நாவலப்பிட்டி என்று முன்னாள் ஜனாதிபதி, முன்னாள் பிரதமர் போன்ற மகிந்த ராஜபக்ஷ அணியினர் புறப்பட்டிருக்கிறார்கள்.

எங்கள் தமிழ் ஈழம் சுதந்திரம் பெற்ற நாடாக வாழ வேண்டும் என்ற தொனிப்பொருளில் அதை நோக்கி எங்கள் மக்கள் செல்லக்கூடிய விதம் இருக்கவேண்டும். தமிழக தரப்புகள் உட்பட அத்தனை தமிழர்களும் நகர வேண்டும் என்பதுதான் எங்களுடைய எதிர்பார்ப்பு.

இந்தக் காடுகளை சீர்படுத்தி, எழில் கொஞ்சும் தேயிலைத் தோட்டங்களையும், இறப்பர் தோட்டங்களையும் அமைக்க மலையக மக்களை பயன்படுத்தியதைப்போன்று, பெருந்தெருக்களையும், புகையிரத வீதிகளையும் அமைக்கப் பயன்படுத்தினார்கள். ஆனால், அவர்கள் பல ஆண்டுகளாக குடியுரிமை இல்லாதிருக்கிறார்கள்.

ஆகவே, உடனடியாக அரசாங்கம் மலையகத் தமிழ் மக்களுடைய வீட்டுப் பிரச்சினை, காணி பிரச்சினைகளுக்கு முடிவுகள் கட்டப்பட வேண்டும் என்பதுதான் எங்களுடைய கோரிக்கை. அதனை தமிழீழ மக்கள் அனைவரும் ஆதரித்து நிற்போம், அனைத்து வழிகளிலும் உதவி செய்வதற்குத் தயாராக இருக்கின்றோம் - என்றார்.

# மில்லேவ தமிழ் மாணவர்களுக்கு தன்னார்வ உதவி





ஹொரணை, மில்லேவ தமிழ் வித்தியாலய மாண வர்களுக்கு புத்தகப்பை கள், பாதணிகள், உணவுப் பெட்டிகள், கற்றல் உபகரணங்கள் உள்ளிட் டவை வழங்கும் நிகழ்வு ஒக்டோபர் 16 அன்று மில்லேவ தமிழ் வித்தியாலயத்தில் நடை பெற்றது. பூமணி அம்மா அறக்கட்டளை மற்றும் சர்வதேச தமிழ் வானொலி உள்ளிட்ட தன்னார்வ அமைப்புகளின் ஒருங்கமைப்பில் நடத்தப்பட்ட இந்த நிகழ்வில் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு இந்த நன்கொடை உதவிப் பொருட்கள் கையளிக்கப் பட்டன.

அமெரிக்காவைச் சேர்ந்த திரு. திருமதி சிங்கநாயகம் புனிதம் குடும்பத்தினர், மற்றும் கனடாவைச் சேர்ந்த பூமணி அம்மா, அறக்கட்டளை நன்கொடையாளர் இராதாகிருஷ்ணன் ஆகியோரின் பூரண அனுசரணையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சமூக செயற்பாட்டாளர் திருமதி ரெஜினா இளஞ்செழியன், பாடசாலையின் அதிபர் மருதமுத்து சிவகுமார் மற்றும் சிரேஷ்ட ஊடகவியலாளர் மணி ஸ்ரீகாந்தன் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தார்கள்.



**அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் 2022, 2023ஆம் ஆண்டுக்கான மாவட்ட பணிப்பாளராக இரண்டாவது முறையாகவும் இஹ்திஸான் முஹுசைதீன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இவர் கடந்த வருடம் சிறந்த மாவட்ட பணிப்பாளர் என்ற விருது உட்பட மேலும் எட்டு விருதுகளை கண்டி மாவட்டத்திற்கு பெற்றுக்கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.**

**- (இக்பால் அலி )**











**மத்துகம, அன்னாசிகல தமிழ் வித்தியாலயத்தில் நவராத்திரி வாணி விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அதிபர் ஏ.ஸீ.எம்.றிப்கான் தலைமையில் இடம்பெற்ற வாணி விழா இறுதி நாள் நிகழ்வில் டீ. திலிப்குமார் ஆசிரியரின் வழிகாட்டலில் விசேட பூஜை நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. ஆசிரியைகளான கே.மலர்விழி, கே.ஆர்.தீபாஞ்சலி, எம்.அமிலா ஆகியோரினால் ஒருங்கமைப்பு செய்யப்பட்ட மாணவர்களின் விசேட கலை நிகழ்ச்சிகள் விழாவை அலங்கரித்தன. இந்நிகழ்வில் பெற்றோர்கள், பழைய மாணவர்கள் மற்றும் நலன்விரும்பிகள் உள்ளிட்ட பலரும் பங்குபற்றினர். இப்பாடசாலையின் முன்னாள் அதிபரும், சாந்த மரியாள் மகா வித்தியாலய தமிழ்ப் பிரிவின் முன்னாள் அதிபருமான ஏ.தேவராஜா விசேட அதிதியாகக் கலந்து சமயச் சொற்பொழிவாற்றி சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.**

# கருத்து கந்தசாமி

**பிரான்ஸில் தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் இங்கிலாந்திலுள்ள பட்டினி நிலைமைகளுக்கும் ராஜபக்ஷக்களுக்கு தொடர்பு உள்ளதா என ஆளுங்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே அண்மையில் கேள்வி எழுப்பியிருந்ததை வாசித்தேன்.**

**இரசாயன உர பயன்பாட்டுக்கு தடைவிதித்து நாட்டின் விவசாயம் சீரழிய காரணமாக இருந்த கோட்டா அரசின் அமைச்சர் மஹிந்தானந்த, இதுவும் சொல்லுவார், இன்னமும் சொல்லுவார். நாட்டு மக்கள் மாங்காய் மடையர்கள் என்று**



**மஹிந்தானந்த இன்னம் நினைத்துக் கொண்டிருக் கிறார்.**

**நாளைக்கே எலெக்சன் வந்தாலும் நாங்கள்தான் வெல்வோம் என்று மஹிந்தானந்த கூறுவதை பார்த்தால், அடுத்து நடக்கும் எந்தத் தேர்தலும் நீதியாக நடக்காது என்பதனையே சொல்லி நிற்கிறது... மக்களே உங்களுக்குப் புரிகிறதா ?**



# ஆஸி. ஒருநாள் அணியின் தலைவராக டெஸ்ட் அணியின் தலைவர்



அவுஸ்திரேலிய ஒருநாள் கிரிக்கெட் அணியின் புதிய தலைவராக வேகப்பந்துவீச்சாளர் பேட் கம்மின்ஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஒருநாள் அணியின் தலைவராக செயற்பட்டுவந்த ஆரோன் பின்ச், ஒருநாள் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்தார். அதைத் தொடர்ந்து அடுத்த தலைவர் யார் நியமிக்கப்படுவார் என்ற எதிர்பார்ப்பு ரசிகர்களிடம் இருந்த நிலையில், பேட் கம்மின்ஸ் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுளளார்.

டெஸ்ட் கிரிக்கெட் அணியின் தலைவராக தொடர்ந்து செயற்பட்டுவரும் கம்மின்ஸ், எதிர்வரும் நவம்பர் மாதம் இங்கிலாந்து அணிக்கு எதிராக நடைபெறவுள்ள ஒருநாள் தொடர்முதல் கம்மின்ஸ் தலைவராக செயற்படுவார் என அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

# அடுத்த சுற்றுக்கான இருப்பை தக்கவைத்த இலங்கை

ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரில் நேற்று தங்களது இரண்டாவது ஆட்டத்தில் ஐக்கிய அரபு இராச்சிய அணியை எதிர்கொண்ட இலங்கை 79 ஓட்டங்களினால் அபார வெற்றிபெற்று சுப்பர் 12 சுற்றுக்குத் தகுதிபெறுவதற்கான இருப்பை தக்கவைத்துக்கொண்டது.

முதல் சுற்றில் குழு ஏ யில் இடம்பெற்றுள்ள இலங்கை அணி, தங்களது முதல் ஆட்டத்தில் நமீபிய அணியிடம் படுதோல்வியடைந்தது. அதன் பின் அடுத்த சுற்றுக்குத் தகுதிபெற அடுத்த இரு போட்டிகளிலும் கட்டாய வெற்றிபெற வேண்டிய நிலையில் இலங்கை அணி நேற்று ஐக்கிய அரபு இராச்சிய அணியை எதிர்கொண்டது.



முதலில் ஆடிய இலங்கை அணி 20 ஓவர்களில் 152 ஓட்டங்களைக் குவித்தது. பதிலெடுத்தாடிய ஐக்கிய அரபு இராச்சிய அணி 73 ஓட்டங்களுக்குள் சுருண்டு போனது. இலங்கை அணி நாளை நடைபெறும் நெதர்லாந்து அணியுடனான ஆட்டத்தில் வெற்றிபெறும் நிலையில் அடுத்த சுற்றுக்கு முன்னேறலாம்.

எங்கள் சிங்கங்களை வாழ்திட நீங்களும் இணைந்துக்கொள்ளுங்கள்
QR குறியீட்டை Scan செய்து உங்கள் வாழ்த்துகளை பதிவு செய்யுங்கள்
Sri Lanka Cricket
தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகப்பூர்வ அனுசரணையாளர்
Dialog
எதிர்காலம் இன்றே.

Champion
Germ Fighting Real Soap

# உதைபந்தாட்ட சுற்றுத்தொடரில் சம்பியன் பட்டம் வென்ற சன்பேட்ஸ் அணி



(செ. திவாகரன்)

நுவரெலியா யங்பேட்ஸ் விளையாட்டுக் கழகத்தின் 47 வருட பூர்த்தியை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட எம்.எஸ். லீ சுற்றுக் கிண்ணத்திற்கான அணிக்கு ஏழு பேர்கொண்ட உதைபந்தாட்டப் போட்டி கடந்த வார இறுதியில் நுவரெலியா புதிய நகர மண்டப விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

28 கழகங்கள் பங்குபற்றிய இந்தப் போட்டியில் சன்பேட்ஸ் அணி முதலாம் இடத்தையும், கல்வேஸ் அணி இரண்டாம் இடத்தையும் பெற்றன. இறுதிப்போட்டியில் சன்பேட்ஸ் அணி 6-1 என்ற கோல்கள் எண்ணிக்கையில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தையும் ரூ.30 ஆயிரம் பணப்பரிசையும் பெற்றுக்கொண்டது.

தொடரில் சிறந்த வீரராக சன்பேட்ஸ் அணியின் ஸ்ரீபன் ராஜ் மற்றும் சிறந்த கோல் காப்பாளராக அதே அணியைச் சேர்ந்த கார்த்திக் ஆகியோர் தெரிவாகினர்.

இருவருக்கும் தலா ரூ. 5 ஆயிரமும், வெற்றிக் கிண்ணமும் வழங்கப்பட்டன.

இப்போட்டியின் பரிசளிப்பு வைபவத்தில் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினர் ஆர்.இராஜாராம், நுவரெலியா மாநகர சபை உறுப்பினர்களான ஜெயராம் வினோஜ், சட்டத்தரணி எஸ். யோகராஜா, விஸ்ணுவர்தன் மற்றும் யங்பேட்ஸ் கழகத்தின் ஸ்தாபகரும் நுவரெலியா மாநகர முன்னாள் பிரதி முதல்வருமான எல்.நேருஜியின் புதல்வரான வைத்தியர் சஞ்சே காந்த் ஆகியோர் கலந்து வெற்றிக்கிண்ணத்தை வழங்கினர்.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

## இதுவரையில் 2.9 மில்லியன் ரிக்கெட்டுகள் விற்பனை

கட்டாரில் நடைபெறவுள்ள உலகக்கிண்ணத் தொடருக்கு சுமார் 2.9 மில்லியன் ரிக்கெட்டுகள் விற்கப்பட்டுள்ளதாக பீபாவின் அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

சுமார் 7 வீதமான இடங்கள் இன்னும் உள்ளன. அமெரிக்கா, சவூதி அரேபியா, இங்கிலாந்தில் வசிக்கும் மக்கள் சர்வதேச ரிக்கெட் வாங்குபவர்களின் பட்டியலில் முதலிடத்தில் உள்ளனர். அதேநேரத்தில் மெக்சிகோ கட்டாருக்கு வெளியே மிகப்பெரிய சந்தையாக இருந்தது.

உலகளவில் 4,20,000 பேர் கட்டாரில் பணிபுரியும் ஒரு போட்டித் தன்னார்வத் தொண்டராக விண்ணப்பித்திருந்தாலும், 20,000 பேர் மட்டுமே தெரிவுசெய்யப்பட்டுள்ளனர் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.



## எகொடவத்த கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் டைடன்ஸ் அணி சம்பியன்






(பேருவளை பீ.எம்.முக்தார்)

பேருவளை சீனன்கோட்டை எகொடவத்த டைடன்ஸ் விளையாட்டுக் கழக ஏற்பாட்டிலான எகொடவத்த கிரிக்கெட் கொண்டாட்ட மாபெரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டி அண்மையில் நளீம் ஹாஜியார் விளையாட்டரங்கில் நடைபெற்றது. 28 அணிகள் பங்குகொண்ட தொடரில் எகொடவத்த டைடன்ஸ் கழகத்திற்கும் தர்கா போய்ஸ் கழகத்திற்குமிடையே இடம்பெற்ற இறுதிப் போட்டியில் டைடன்ஸ் அணி வெற்றிபெற்று கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது.

இறுதிப் போட்டியின் டைடன்ஸ் அணியின் சஹீட் அன்சாப் தெரிவுசெய்யப்பட்டதோடு, தொடரின் நாயகனாக அதே அணியின் இன்சாப் தெரிவு செய்யப்பட்டார். தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரராக றிம்சாத் தெரிவுசெய்யப்பட்டதோடு, சிறந்த பந்துவீச்சாளராக டைடன்ஸ் அணியின் சசீன் தெரிவுசெய்யப்பட்டார். வளர்ந்துவரும் இளம் அணிக்கான விருதினை பார்கின்ஸ்ட் அணியினர் பெற்றுக்கொண்டனர்.

இறுதிப் போட்டியின் சிறப்பு விருந்தினராக சீனன்கோட்டை பள்ளிச் சங்கத் தலைவர் ஏ.எச்.எம். முக்தார் ஹாஜியார், பேருவளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லலித் பத்தமகுமார, இரத்தினக்கல் வர்த்தகர்களான ஏ.ஜே.எம். முஹம்மத் ராஸிக் ஜே.பி, ஏ.ஐ.எம்.பளீல் ஹாஜியார், ஹாரிஸ் ஹாஜியார், பி.எம்.றிஸ்வான் ஹாஜியார் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

நான்கு நாட்களாக வெகு விமரிசையாக நடைபெற்ற இச்சுற்றுப் போட்டியில் சுற்றுப் போட்டி ஏற்பாட்டாளர்களான டைடன்ஸ் விளையாட்டுக் கழக அணியினர் தமது வரலாற்றில் முதல்முறையாக சம்பியனாக வெற்றிவாகை சூடியது சிறப்பம்சமாகும்.

# ஐயங்கேணி ஹிஸ்புல்லாஹ் வித்தியாலய மைதானத்தில் டெங்கு ஒழிப்பு சிரமதானம்



(ஏறாவூர் நிருபர்)

அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப் பட்டுள்ள டெங்கு ஒழிப்பு வாரத்தையிட்டு நாட்டின் சகல பகுதிகளிலும் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதனடிப்படையில் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்திலுள்ள ஏறாவூர் கோட்டத்தில் விசேட தேவையுடைய மாணவர்களை உள்ளடக்கிய ஐயங்கேணி ஹிஸ்புல்லாஹ் வித்தியாலயத்தில் காடு மண்டிக் காணப்பட்ட விளையாட்டு மைதானம் சிரமதானப்பணி மூலமாக துப்பரவு செய்யப்பட்டுள்ளது.

ஏறாவூர் சமூக சேவைகள் அபிவிருத்தி ஒன்றியத்தின் பிரதிநிதிகள் அதன் தலைவர் எம்.எப்.எம்.பாறூக் தலைமையில் இப்பணிகளில் முழுமையாக ஈடுபட்டதாக பாடசாலை அதிபர் எச்.எம்.எம்.பஷீர் தெரிவித்தார்.

ஆரம்பநெறி பாடசாலையான இக்கல்விக் கூடத்திலுள்ள சிறுவர் பூங்கா மற்றும் விளையாட்டு முற்றம் ஆகியன பயன்படுத்த முடியாத நிலையில், காணப்பட்டதைக் கருத்தில்கொண்டு அதனைச் சுத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சமூக சேவைகள் அபிவிருத்தி ஒன்றியத்தின் பிரதிநிதிகளுடன் இப்பாடசாலையின் அதிபர் மற்றும் ஆசிரியர்களும் பணியில் ஈடுபட்டனர்.

விளையாட்டு மைதானம் காடு மண்டிக் காணப்பட்டதனால் இப்பாடசாலை மாணவர்களுக்கு பாம்புகள் முதலான விஷ ஜந்துக்களின் அச்சுறுத்தல் காணப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.



அட்டாளைச்சேனை மீனோடைக்கட்டு மத்ரஸா மாணவர்களின் மீலாதுன் நபி விழா ஊர்வலமாக செல்வதைக் காணலாம். (படம்-கோணாவத்தை நிருபர்)

## வறுமை ஒழிப்புத் தினத்தில் சமுர்த்தி பயனாளிகளிடம் வீடுகள் கையளிப்பு



(கல்குடா நிருபர்)

சர்வதேச வறுமை ஒழிப்புத் தினத்தை (ஒக்டோபர் 17) முன்னிட்டு நாடளாவிய ரீதியில் பல்வேறு வேலைத்திட்டங்கள் பிரதேச செயலகம் தோறும் இடம்பெற்றன.

இதனடிப்படையில் நேற்று முன்தினம் ஓட்டமாவடி பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் முன்பள்ளி மாணவர்களுக்கு போசாக்கு உணவு வழங்கும் வேலைத்திட்டமும் சௌபாக்கியா விசேட வீடமைப்புத் திட்டத்தில் அமைக்கப்பட்ட வீடுகள் பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வும் இடம்பெற்றன.

சமுர்த்தி தலைமையக முகாமையாளர் எம்.ஐ.அஸீஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக ஓட்டமாவடி பிரதேச செயலாளர் வீ.தவராஜா கலந்துகொண்டதுடன், சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளர் என்.விஜிதன், கிராம சேவை அதிகாரிகள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

சௌபாக்கியா விசேட வீடமைப்புத் திட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தினால் இரண்டு இலட்சத்து 25 ஆயிரம் ரூபா நிதிப் பங்களிப்பில் பயனாளியின் ஐந்து இலட்சம் ரூபா நிதியுடன் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக சமுர்த்தி சமுக அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.என்.எம்.சாஜஹான் தெரிவித்தார்.

# மண்முனைப்பற்றில் கலாசார இலக்கிய விழா



(மட்டக்களப்பு நிருபர்)

மண்முனைப்பற்று பிரதேச செயலகமும் கலாசாரப் பேரவையும் கலாசார அதிகார சபையும் இணைந்து நடத்திய கலாசார மற்றும் இலக்கிய விழா நிகழ்வு நந்தகோபன் கலாசார மண்டபத்தில் மண்முனைப்பற்று பிரதேச செயலாளர் திருமதி சத்தியானந்தி நமசிவாயம் தலைமையில் இடம்பெற்றுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் கே.கருணாகரனும் சிறப்பு அதிதியாக மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந்த்தும் கௌரவ அதிதிகளாக சுகாதார வைத்திய அதிகாரி த.பிரபாசங்கர், கோட்டக்கல்வி அதிகாரி சீ.தில்லைநாதனும் கலந்து சிறப்பித்திருந்ததுடன் மண்முனைப்பற்று பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் திருமதி. எல்.விவேகானந்தராஜ், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. எம்.ஜெயசந்திரன், பாடசாலை அதிபர்கள், பிரதேச கலைஞர்கள், பாடசாலை மாணவர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் சிகரம் நூல் வெளியீடும், 8 கலைஞர்களுக்கான கௌரவிப்பும் இடம்பெற்றதுடன், இலக்கியப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்கள் மற்றும் கலைஞர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் அதிதிகளினால் வழங்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# போசாக்கான உணவுத்திட்ட பிரேரணைக்கமைய கல்முனையில் புதிய வகை பிஸ்கட் அறிமுகம்





(மாளிகைக்காடு நிருபர்)

கடந்த 2022.10.15ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கப்பட்ட போசாக்கான உணவுத்திட்ட பிரேரணைக்கமைவாக நேற்று முன்தினம் (17) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸினால் போசாக்கு பிஸ்கட்டுகள் பரிசீலனைக்காக வழங்கப்பட்டன.

கல்முனை பிராந்திய ஆயுர்வேத பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.ஏ.நபீலின் மருந்து உற்பத்திப் பிரிவினால் தயாரிக்கப்பட்ட குறித்த பிஸ்கட்டுகள் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படுவதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிகழ்வில் பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் எம்.பீ.ஏ.வாஜித், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் ஆசாத் எம்.ஹனிபா, திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.சீ.எம்.மாஹிர், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் திட்டமிடல் வைத்தியர் ஏ.ஆர்.நியாஸ், நிர்வாக உத்தியோகத்தர் கே.ஏ.ஜப்பார் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

# நகைக்கடை வர்த்தகருடன் கைகலப்பு; கடைக்காரர் மீது கோடரியால் தாக்குதல்

(வாழைச்சேனை நிருபர்)

வாழைச்சேனை சந்தைப் பகுதியிலுள்ள நகைக்கடை ஒன்றில் நேற்று முன்தினம் மாலை (17) இடம்பெற்ற கைகலப்பில் கடைக்காரர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டுள்ளார்.

பாதிப்புற்றவர் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர், மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 6 மாதங்களுக்கு முன்பு மாங்கேணி வாகரையைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் மேற்படி நகைக்கடையில் இரு தங்க நகையை வெவ்வேறாக அடகுவைத்து பணம் பெற்றுள்ளார். அதில் ஒரு நகையைத் திரும்பப் பெற்றுக்கொள்வதற்காக கிடைக்கும் பணத்தினை செலுத்தி வந்துள்ளார். சம்பவம் இடம்பெற்ற தினமன்று (17) மீதியாக செலுத்த வேண்டிய பணத்தை செலுத்தியபின்னர் நகையை கையளிக்குமாறு கேட்டபோது நகைக்கடைக்காரர் திருப்பிக்கொடுக்க மறுப்புத் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து இருவருக்கிடையில் வாக்குவாதம் ஏற்பட்டு கைகலப்பாக மாறி, பின்னர் கைக்கோடரியால் நகைக்கடைக்காரர் தாக்குதலுக்குள்ளாக்கப்பட்டதாக ஆரம்பகட்ட விசாரணையின்போது பொலிஸாரின் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதல் மேற்கொண்டவர் வாழைச்சேனை பொலிஸ் நிலையத்திற்கு நேரடியாகச் சென்று சரணடைந்துள்ளார். பொலிஸார் நேற்று (18) சந்தேகநபரை வாழைச்சேனை மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை அத்தியட்சகராக ரொஷான்போல் நியமனம்



(சியாத் .எம்.இஸ்மாயில்)

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு புதிய வைத்திய அத்தியட்சகராக டொக்டர் ஞானகுணாளன் ரொஷான் போல் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் அண்மையில் உத்தியோகபூர்வமாக தமது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.

சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டொக்டர் அஸாத்.எம்.ஹனிபா, பதில் வைத்திய அத்தியட்சகராக வந்த நிலையிலேயே சுகாதார அமைச்சினால் இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் வைத்திய நிபுணர்கள், வைத்திய அதிகாரிகள், தாதிய பரிபாலகர்கள், கணக்காளர், நிருவாக உத்தியோகத்தர், அலுவலக உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## போடியார் புலம்பல்!



**ரணில் இப்ப கொள்ளையர்கள் கூட்டத்தில உள்ளாராம் எண்டு நுவரேலியா எம்.பி. ராதா கிருஷ்ணன் சொல்லுறாரு எலுவா?**

**அவர் எப்பவுமே நரிபுத்தி உள்ள மனிசன். இப்பதான் வாழ்க்கையில ஜனாதிபதி பதவி கோட்டாட புண்ணியத்தால கிடைச்சிருக்கு. அந்த நன்றிக்காக கொள்ளையர் கூட்டத்தோட சேராமல் மறுகா வெள்ளையர் கூட்டத்தோடயா சேருவாலு?**

**அடுத்த விசேட உரை கெதியா ஆற்றுவார். அப்ப பாப்பம்!**

# முன்பள்ளி மாணவர்களுக்கு இலைக்கஞ்சி வழங்கிவைப்பு





(அட்டாளைச்சேனை மத்திய, திராய்கேணி நிருபர்கள்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலகப் பிரிவில் சர்வதேச வறுமை ஒழிப்புத் தினம் ஒக்டோபர் 17ஐ முன்னிட்டு சமுர்த்தி பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட முன்பள்ளி சிறார்களுக்கு போசாக்கு மட்டத்தினை அதிகரிக்கும் பொருட்டு ஒரு கோப்பை இலைக்கஞ்சி வழங்கும் வேலைத்திட்டத்தின் மாவட்ட மட்ட ஆரம்ப நிகழ்வு அட்டாளைச்சேனை பிரதேச செயலக அட்டாளைச்சேனை-08, பாலமுனை-04 ஆகிய கிராமசேவகர் பிரிவுகளில் நேற்று முன்தினம் (17) இடம்பெற்றது.

சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.எம்.ஹமீட்டின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ சி. அஹமட் ஸாபிர் கலந்து கொண்டதுடன், உதவி பிரதேச செயலாளர் சட்டத்தரணி எப். நஹீஜா முஸாபிர், அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி, சமுர்த்தி வங்கி, வலய முகாமையாளர் எம்.ஏ.இமாமுதீன், திட்ட முகாமையாளர் எஸ்.எல்.அஸீஸ், சமுர்த்தி சமுக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எஸ்.எம்.உனைஸ், சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் விடய உத்தியோகத்தர் எஸ்.சர்ஜானா உட்பட மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக மட்ட உத்தியோகத்தர்கள், பிரவுகளுக்கான சமுர்த்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# ஒரு இலட்சம் வெளிநாட்டு வேலைவாய்ப்புத் திட்டத்தில் மட்டக்களப்பில் ஜப்பான் மொழிப் பயிற்சிகள் ஆரம்பம்

(மட்டக்களப்பு நிருபர்)

"சுபீட்சமானதோர் தேசம் - ஒரு இலட்சம் வெளிநாட்டு வேலைவாயப்புகள்" எனும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் மட்டக்களப்பில் ஜப்பான் மொழிப் பயிற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நாட்டிலுள்ள வேலையற்ற இளைஞர், யுவதிகளை வேலைவாய்ப்பிற்காக ஜப்பான் நாட்டிற்கு அனுப்பிவைக்கும் நோக்கில் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புத் திணைக்களம் என்பன இணைந்து நடத்தும் ஜப்பான் மொழிப் பயிற்சிப் பட்டறை மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரனின் வழிகாட்டலில், சமுர்த்தி திணைக்கள மாவட்ட பணிப்பாளர் புவனேந்திரன் தலைமையில் நேற்று முன்தினம் (17) மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

ஜப்பான் மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் செய்துகொண்ட உடன்படிக்கைக்கமைவாக ஒரு இலட்சம் இளைஞர், யுவதிகளை வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக ஜப்பான் நாட்டிற்கு அனுப்புவதற்காக அந்நாட்டு மொழியினை இந்த இளைஞர், யுவதிகளுக்கு கற்பிக்கும் தேசிய வேலைத்திட்டம் நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கிராமசேவகர் பிரிவிற்கு இருவர் என்ற அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட இளைஞர், யுவதிகளில் 50 பேர் முதற்கட்டமாக ஜப்பான் மொழியினைக் கற்பிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இதன்போது அரசாங்க அதிபர் கருணாகரன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையில், இம்மாவட்டத்தில் மொழிப்பயிற்சி நிலையம் அமையப்பெற்றிருப்பது இளைஞர் யுவதிகளுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு. இதனை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். ஒரு மொழியை மாத்திரமன்றி அம்மக்களுடைய கலாசார பண்பாடுகளையும் அறிந்துகொள்ள வாய்ப்பளிக்கின்றது. இப்பயிற்சியினைத் தொடரும் இளைஞர், யுவதிகள் ஜப்பான் நாட்டிற்கு செல்லவேண்டும் என்ற கனவுடனும் ஆர்வத்துடனும் கற்கவேண்டும் எனவும் தெரிவித்தார்.

மேலும் இப்பாடநெறிக்கான வளவாளர், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வீ.வாசுதேவன். இவர் தனது முதுமாணிக் கற்கையினை ஜப்பான் நாட்டில், ஜப்பான் மொழியில் இரண்டுவருடங்கள் அங்கேயே தங்கியிருந்து கற்றவர். சிறந்த ஆளுமையுள்ளவர். இது எமது மாவட்டத்திற்கு கிடைத்த வரம் எனவும் தெரிவித்தார்.

இதன்போது சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்கள மாவட்ட கணக்காளர் எஸ்.எம்.பசீர், வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக மட்டக்களப்பு மாவட்ட நிலையப் பொறுப்பதிகாரி எ.பீ.எம். சலீம், சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்கள மாவட்ட தலைமை முகாமையாளர் ஜே.எப்.மனோகிதராஜ், ஜப்பான் மொழிப்பயிற்சி நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் எம்.அலிஅக்பர், சமுர்த்தி முகாமையாளர்கள், பயிற்சியாளர்கள் பலரும் பிரசன்னமாயிருந்தனர்.

சுமார் 300 மணித்தியாலங்கள்கொண்ட நெட்-5 தரத்திலான இக்கற்கை நெறியினைப் பூர்த்திசெய்தபின்னர் பரீட்சையை எதிர்கொள்ள வேண்டும். இப்பரீட்சையில் சித்தி பெறுபவர்களுக்கு ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபா வரையிலான சம்பளத்துடன் வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளமுடியும். மேலும் நேர்முகத்தேர்விற்குப் பின்னர் சுமார் 7 இலட்சம் ரூபா வரையிலான சம்பளத்துடன் வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

# சம்மாந்துறையில் ஆணொருவர் சடலமாக மீட்பு



(பாறுக் ஷிஹான்)

சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மல்வத்தை பழைய வளத்தாப்பிட்டி விபுலானந்தர் வீதியிலுள்ள வெற்றுக்காணி ஒன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.


அம்பாறை மாவட்டம், சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மல்வத்தை பழைய வளத்தாப்பிட்டி விபுலானந்தர் வீதியைச் சேர்ந்த 64 வயதுடைய சவரிமுத்து தேவதாஸ் என்பவரே மரமொன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் நேற்று முன்தினம் (17) சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

மேலும் சம்மாந்துறை நீதிமன்ற நீதிவானின் கட்டளையின் பிரகாரம் பிரதேச மரண விசாரணை அதிகாரி அப்துல் ஹமீட் அல் - ஜவாஹிர் சம்பவ இடத்திற்குச் சென்று மரண விசாரணையை மேற்கொண்டார். பின்னர் சடலம் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டு, பிரேத பரிசோதனையை மேற்கொள்ளுமாறு சட்ட வைத்திய அதிகாரிக்கு பிரதேச மரண விசாரணை அதிகாரி அப்துல் ஹமீட் அல் - ஜவாஹிர் கட்டளையிட்டார்.

மேலும் குறித்த மரணம் தூக்கினால் கழுத்து இறுகிய நிலையில் சம்பவித்துள்ளது என பிரேத பரிசோதனையில் குறிப்பிடப்பட்டு பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

# அரச ஆதரவாளர்கள் சுகபோகம் அனுபவிக்க மக்கள் மீது வரி சுமத்துவதை ஏற்கமுடியாது

## இம்ரான் எம்.பி. கண்டனம்



(கிண்ணியா நிருபர்)

மக்களுக்கு உதவுவதைவிட மக்களிடம் இருந்து உறிஞ்சி தம்மை வளப்படுத்திக் கொள்ளும் அரசு நம் நாட்டில் இருப்பது குறித்து அனைவரும், வெட்கமும் வேதனையும் அடைய வேண்டியுள்ளது - என திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

அவர் ஊடகங்களுக்கு நேற்று (18) வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அரசாங்கம் என்பது பொதுமக்கள் நலன்சார்ந்த விடயங்களில் அக்கறை செலுத்தி பொதுமக்கள் எதிர்நோக்கும் சிரமங்களைக் குறைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். ஆனால், தற்போதைய அரசாங்கம் பல்வேறு புதிய வரிகளை அமுல்படுத்தி பொதுமக்களை உறிஞ்சத் தயாராகி வருகின்றது.

அரசாங்கம் கஷ்டத்தில் இருக்கும்போது பொதுமக்கள் வரிகளை செலுத்தி அரசாங்கத்துக்கு உதவ வேண்டியது முக்கியம்தான். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனால், இந்த அரசாங்கம் தங்களது கட்சி சார்ந்தவர்கள் சுகபோகம் அனுபவிப்பதற்கான ஏற்பாட்டை தொடர்ந்து முன்னெடுத்து அதனால் ஏற்படும் செலவுகளை ஈடுசெய்ய பல்வேறு வரிகளை பொதுமக்கள் மீது சுமத்த முனைவது ஏற்றுக்கொள்ள முடியாதது.

எப்போதோ கலைக்கப்பட வேண்டிய உள்ளூராட்சி மன்றங்களை கலைத்து தேர்தல் நடத்தப்படும் வரை விசேட ஆணையாளர்களின் கீழ் இவற்றைக்கொண்டு வந்திருந்தால் மாதாந்தம் பல நூறு மில்லியன் ரூபாவை மீதப்படுத்த முடியும். தமது கட்சி ஆதரவாளர்கள் மாதாந்தம் கொடுப்பனவுகள் பெறவேண்டும், வரப்பிரசாதங்களை அனுபவிக்க வேண்டும் என்பதற்காக அவற்றை கலைக்காமல் நீடித்து வைத்திருப்பது எந்தவகையில் நியாயமானது எனக் கேட்க விரும்புகின்றேன்.

நாடு இப்போதிருக்கும் சூழ்நிலையில் பெரிய அமைச்சரவையும், பெரிய எண்ணிக்கையிலான பிரதி அமைச்சர்களும் தேவையில்லை. எனினும், அரசாங்கம் தமது கட்சிக்காரர்களைத் திருப்திப்படுத்த வேண்டும் என்பதற்காக பெரிய அமைச்சரவையையும், அதிக பிரதி அமைச்சர்களையும் நியமித்துள்ளது. இதற்காக மாதாந்தம் சுமார் 100 மில்லியன் ரூபாவை செலவிடுகின்றது.

ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர்களை நியமிக்கக்கூடாது என்று கூறும் அரசாங்கம், ஓய்வுபெற்ற தமக்கு நெருங்கியவர்களை அமைச்சு செயலாளர்களாகவும், திணைக்களத் தலைவர்களாகவும் ஒப்பந்த அடிப்படையில் நியமித்து மேலதிக செலவுகளைச் செய்து வருகின்றது.

இந்த செலவுகளை ஈடுசெய்வதற்காகவே அரசு புதிய புதிய வரிகளை மக்கள் மீது அமுல்படுத்துகின்றது. இன்னொரு வகையில் சொல்வதென்றால் தங்களது சுகபோகத்திற்காக மக்களைச் சுரண்டும் செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுக்கின்றது. இதனை பொதுமக்களும், அரச உத்தியோகத்தர்களும் ஏற்றுக்கொள்ள முடியுமா என்பது குறித்து சிந்திக்க வேண்டுமென அவர் கூறினார்.

# கிழக்கு மாகாண விளையாட்டுப் போட்டியில் சாதனை படைத்த வீரர்களுக்கு பாராட்டு!



(நூருள் ஹுதா உமர், எம்.என்.எம்.அப்ராஸ்)

கிழக்கு மாகாண விளையாட்டுப் போட்டிகளில் சாதனை படைத்து தேசிய போட்டிக்குத் தெரிவான நற்பிட்டிமுனை வீரர்கள் இருவருக்கு நற்பிட்டிமுனை அல்-கரீம் பவுண்டேஷன் ஏற்பாட்டில் இன்று சாதனையாளர் பாராட்டு நிகழ்வு சவளக்கடையில் நடைபெற்றது.

அல்-கரீம் பவுண்டேஷன் தலைவர் சீ.எம். ஹலீம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பரிதி வட்டம் வீசும் போட்டியில் வெளிப்பதக்கம் வென்ற அமீருன் பாத்திமா அஸ்தாவுக்கு "சாதனை மங்கை" விருதும், நீளம் பாய்தல் போட்டியில் வெள்ளிப் பதக்கமும், 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் வெண்கலப் பதக்கமும் வென்ற ஜபாஹிர் முகம்மட் முஆத்திற்கு "சாதனை வீரன்" விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக் பிரதம அதிதியாக கலந்துகொண்டு வீரர்களைப் பாராட்டி உரையாற்றினார். தனது உரையில் மேலும் இப்போதைய கல்வி முறையில் மாற்றம் வரும் வாய்ப்புள்ளது. அது காலத்தின் தேவையாக உள்ளது. அத்துடன் கல்விக்கு மேலதிகமாக விளையாட்டும், ஏனைய திறமைகளும் முழு மனிதனாக மாற்றும் தன்மை கொண்டது என்றார்.

நிகழ்வில் வீரத்திடல் கமு/சது/அல் ஹிதாயா மகா வித்தியாலய அதிபர் திருமதி ஏ. முனாஷிர், நற்பிட்டிமுனை கமு/கமு/அல்-அக்ஸா மத்திய மகா வித்தியாலய உதவி அதிபர் மௌலவி ஏ.சாலித்தீன் அமைப்பின் செயலாளர் யூ.எல்.எம்.பாயிஸ், அமைப்பின் பொருளாளரும், கல்முனை மாநகர சபை சுகாதரப் பிரிவின் நிலையப் பொறுப்பதிகாரியுமான ஊடகவியலாளர் யூ.எம்.இஸ்ஹாக் உட்பட வீரர்களின் பெற்றோர் ஊடகவியலாளர்கள் என பலர் கலந்துகொண்டனர்.



# “அம்மாவை காப்பாற்றியிருக்கலாம்”



## ஆறுமுகசாமி விசாரணை ஆணையக அறிக்கையில் அதிர்ச்சித் தகவல்கள் அம்பலம்




### “எஞ்சியோ சிகிச்சை செய்யவிடாது தடுத்தது சசிகலாவே”

### ஆணையம் பரிந்துரைத்த குற்றவாளிகள் நால்வர் மீதும் விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்க தமிழக அரசு உத்தரவு





“ஜெயலலிதாவுக்கு மருத்துவர்கள் பரிந்துரைத்தபடி இருதய அறுவைசிகிச்சை செய்திருந்தால் அவரைக் காப்பாற்றியிருக்கலாம்” என ஆறுமுகசாமி விசாரணை ஆணையத்தின் இறுதி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மறைந்த முன்னாள் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவை பரிசோதித்த மருத்துவர்கள் அனைவரும் அவருக்கு எஞ்சியோ செய்ய பரிந்துரைத்தனர். ஆனால், ஜெயலலிதாவின் இறுதி மூச்சுவரை அது செய்யப்படவில்லை. அதனைத் தடுத்தது சசிகலாவே என விசாரணை அறிக்கை தெரிவித்துள்ளது.

“ஜெயலலிதா மறைவில் அவரது தோழி வி.கே.சசிகலா உட்பட நான்கு பேர் குற்றவாளிகள்” என விசாரணை ஆணைய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆணையம் பரிந்துரைத்த சசிகலா உட்பட 4 பேர் மீது விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கவேண்டுமென தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

தமிழக சட்டப் பேரவையில் நேற்று தாக்கல் செய்யப்பட்ட ஆறுமுகசாமி விசாரணை ஆணையத்தின் இறுதி அறிக்கையின் 553ஆவது பக்கத்தில் அதிர்ச்சிகரமான பல தகவல்கள் தெரியவந்துள்ளன.

அந்த அறிக்கையின்படி,

- 2016 செப்டெம்பர் 22ஆம் திகதி மருத்துவமனையில் சேர்க்கப்படுவதற்கு மூன்று நாட்களுக்கு முன்பாகவே ஜெயலலிதாவுக்கு அதிக காய்ச்சல் இருந்துள்ளது.

மருத்துவர் சிவக்குமாரின் பரிந்துரையின்படி பெரசிட்டமோல் எடுத்துக்கொண்டுள்ளார்.

- போயஸ் கார்டனில் மயங்கி விழுந்த ஜெயலலிதாவை தாங்கிப் பிடித்த சசிகலாவும், பணியாளர்களும் தாமதிக்காமல் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.
- சுயநினைவின்றி மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

ஜெயலலிதாவுக்கு கட்டுப்பாடற்ற நீரழிவு நோய், மாறுபட்ட இரத்த அழுத்தம், தைரொய்ட், உடல் பருமன், எரிச்சல் கொண்ட குடல் நோய்க்குறி போன்ற உபாதைகள் இருந்துள்ளன.

2016 செப்டெம்பர் 27ஆம் திகதி காவிரி நதி நீர்க் கூட்டம் நடைபெற்றபோது புகைப்படம் எடுக்க ஜெயலலிதா அனுமதித்த போதும், இராமலிங்கம் IAS அதனைத் தடுத்துள்ளார். அன்று இரவே ஜெயலலிதாவுக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவிலிருந்து வரவழைக்கப்பட்ட மருத்துவர் சமின் சர்மா, ஜெயலலிதாவுக்கு எஞ்சியோ செய்ய பரிந்துரை செய்தார். அதனை ஜெயலலிதாவும் ஏற்றுக்கொண்டதாக மருத்துவ அறிக்கை தெரிவிக்கிறது. பின்னர் அவருக்கு அஞ்சியோ செய்யப்படாதது ஏன்? என்ற கேள்வி தொக்கி நிற்கிறது.

அமெரிக்காவிலிருந்து வந்த மருத்துவர் சமின் சர்மா எஞ்சியோ செய்ய பரிந்துரை செய்தும், அதனை ஜெயலலிதாவும் ஏற்றுக்கொண்ட பின்னர் அந்த சிகிச்சையை அளிக்காமல், லண்டனிலிருந்து நுரையீரல் நிபுணரான டாக்டர் பாபு ஆப்ரகாம், மருத்துவர் ரிச்சர்ட் பீலேவை அழைக்க வேண்டும் என்பதற்கான எந்த ஆதாரமும் இல்லை.

எனவே, எஞ்சியோவைத் தவிர்ப்பதற்காக, அதிகாரம் பெற்ற சிலருக்கு உதவுவதற்காக, மருத்துவர் ரிச்சர்ட் பீலே கூறியதை அறுவை சிகிச்சையைத் தள்ளிப்போடலாம் என்று கருத்து தெரிவித்ததாக திரித்துக் கூறி தந்திரமாக செயற்பட்டுள்ளார் மருத்துவர் பாபு ஆபிரகாம் என்று விசாரணை ஆணையம், அவர் மீது சரமாரியான குற்றச்சாட்டுகளை அடுக்கியிருக்கிறது.

சூழ்நிலைகளிலிருந்து பெறப்படும் நியாயமான மற்றும் தவிர்க்கமுடியாத அனுமானம் என்னவெனில், சரியானநேரத்தில் எஞ்சியோ செய்யப்படாமல் இருக்க ஒருவரால் திறமையாக உத்தி கையாளப்பட்டுள்ளது.

மற்றொரு பக்கம், அமெரிக்காவிலிருந்து வந்த சமின் சர்மா, அமெரிக்க மருத்துவர் ஸ்டூவர்ட் ரசல் மற்றும் லண்டன் மருத்துவர் ரிச்சர்ட் பீலே ஆகியோர் ஜெயலலிதாவுக்கு எஞ்சியோ செய்ய பரிந்துரை செய்தும், அவருக்கு செய்யப்படவில்லை. ஜெயலலிதாவுக்கு அஞ்சியோ செய்து, இருதய அறுவைசிகிச்சை செய்யப்பட்டிருந்தால் அவரைக் காப்பாற்றியிருக்கலாம் என்று அறிக்கை ஓர் அதிர்ச்சிகரமான தகவலை இங்கே பதிவு செய்துள்ளது.

ஜெயலலிதா இறந்த பின்னரும், உடனடியாக இறப்பை அறிவிக்காமல், மருத்துவர் பாபு ஆபிரகாம் சிபிஆர் மற்றும் சில மருத்துவ நடவடிக்கைகளை செய்து நேரத்தைக் கடத்தியிருப்பது தெரியவந்துள்ளது.

பொதுவாக ஒரு நோயாளியின் இதயம் செயலிழந்ததும், சிபிஆர் உள்ளிட்ட நடைமுறைகளை செய்து பார்த்துவிட்டு, 45 நிமிடத்துக்குப் பின்னரும் இதயம் இயங்கவில்லையென்றால், நோயாளி இறந்ததாக அறிவிப்பார்கள். ஆனால், ஜெயலலிதா விடயத்தில் அவ்வாறு அறிவிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமின் சர்மா, ரிச்சர்ட் பீலே உள்ளிட்ட மருத்துவர்கள் பரிந்துரைத்தும் ஜெயலலிதாவுக்கு எஞ்சியோ செய்யப்படாதது ஏன்? அதைச் செய்யவிடாமல் தடுத்தது யார்? என்ற கேள்விகள் தொடர்கின்றன.

**சசிகலா உட்பட நால்வரிடம் விசாரணை?**

ஜெயலலிதாவின் மரணம் தொடர்பாக பல்வேறு சந்தேகங்கள் எழுந்திருக்கும் நிலையில் பல்வேறு முடிச்சுகள் அவிழ்க்கப்பட வேண்டும் என்றால் சசிகலா, மருத்துவர் கே.எஸ்.சிவக்குமார், அப்போது சுகாதாரத் துறை அமைச்சராக இருந்த விஜயபாஸ்கர் மற்றும் சுகாதாரத் துறை செயலாளர் ராதாகிருஷ்ணன் உட்பட நால்வர் மீது விசாரணை நடத்த பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

**எஞ்சியோ சிகிச்சை செய்யவிடாமல் தடுத்தது சசிகலாவே**

மேலும், ஜெயலலிதா - சசிகலா இடையே சுமூக உறவு இல்லாததால், தனது சுயலாபத்துக்காக மருத்துவர்கள் பரிந்துரை செய்தும் ஜெயலலிதாவுக்கு எஞ்சியோ சிகிச்சை கிடைக்க விடாமல் சசிகலா தடுத்ததாக பகிரங்கமாகவே குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

ஆகவே, ஜெயலலிதா மரண விவகாரத்தில் சசிகலா உள்ளிட்ட நால்வர் குற்றம் செய்தவர்களாகக் கருதி விசாரணைக்கு உத்தரவிடவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மருத்துவமனை வெளியிட்ட பொய் அறிக்கை**

ஜெயலலிதா உடல்நலம் பாதிக்கப்பட்டு சென்னையிலுள்ள தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்தபோது, அவரது உடல்நிலை குறித்து அவ்வப்போது மருத்துவ அறிக்கைகள் வெளியிடப்படும்.

அதில் ஓர் அறிக்கையை பொய் என்று விசாரணை ஆணையம் தெரிவித்துள்ளது. அதாவது, ஜெயலலிதா எந்த நேரத்திலும் டிஸ்சார்ஜ் செய்யப்படலாம் என்று மருத்துவமனை வெளியிட்ட அறிக்கை பொய் அறிக்கை என்று ஆணையம் குறிப்பிட்டுள்ளது.

**ஓ.பி.எஸ்ஸுக்கு அனைத்தும் தெரியும்**

அப்போதைய துணை முதலமைச்சராக இருந்ததால் அனைத்தையும் அறிந்திருந்த ஓ.பன்னீர்செல்வம், முதலமைச்சர் பதவியை விட்டு விலகியதும் தர்மயுத்தத்தைத் தொடங்கினார். தற்போதைய சூழலைக் கருத்திற்கொண்டு, எந்த சந்தேகமும் இல்லையென்றும், வதந்திகளுக்காகத்தான் இந்த ஆணையத்தின் நியமனம் தேவைப்பட்டது என்றும் கூறினார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இறந்த திகதியில் முரண்பட்ட கருத்து**

இதேவேளை, ஜெயலலிதா இறந்த திகதியில் முரண்பட்ட கருத்துகள் வந்துள்ளதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதாவது, ஜெயலலிதா இறந்தது 2016, டிசம்பர் 5ஆம் திகதி இரவு 11.30 என்று மருத்துவமனை அறிக்கை அளித்த நிலையில், விசாரணையில் டிசம்பர் 4ஆம் திகதி பிற்பகல் 3 முதல் 3.50 மணிக்குள் இறந்திருக்கலாம் என சாட்சியங்கள் தெரிவித்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

ஜெயலலிதா இறந்த திகதியில் குழப்பம் ஏற்பட்டுள்ளமை தற்போது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

2012இல் ஜெயலலிதாவும் சசிகலாவும் இணைந்த பின்னர் இருவரிடமும் சுமுக உறவு இல்லை, ஜெயலலிதா விரைவில் டிஸ்சார்ஜ் செய்யப்படுவார் என பொய் அறிக்கை விடப்பட்டுள்ளது. எய்ம்ஸ் மருத்துவக் குழு எந்த மருந்தையும் சிகிச்சையும் பரிந்துரைக்கவில்லை உள்ளிட்ட தகவல்களும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**ஜெ - சசி இடையே சுமுக உறவில்லை**

அமெரிக்காவிலிருந்து வந்த டொக்டர் சமீன் சர்மா, ஜெயலலிதாவுக்கு இதய அறுவை சிகிச்சை செய்ய பரிந்துரைத்திருந்தார். ஆனால், அது நடக்கவில்லை. 2012ஆம் ஆண்டுமுதல் ஜெயலலிதாவுக்கும், சசிகலாவுக்கும் இடையே சுமுக உறவு இல்லை; ஜெயலலிதாவுக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டவுடன் மருத்துவமனைக்கு தாமதமின்றி அழைத்துச் சென்றுள்ளனர். அதன் பிந்தைய நிகழ்வுகள் சசிகலாவால் இரகசியமாக்கப்பட்டன.

## உலக செய்திகள்

# உக்ரைன் போரால் 40 இலட்சம் குழந்தைகள் வறுமையில் அவதி

உக்ரைன் மீது ரஷ்யா தொடுத்த போரால் இதுவரை 40 இலட்சம் குழந்தைகள் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.

நேட்டோ கூட்டமைப்பில் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த பெப்ரவரி 24ஆம் திகதி உக்ரைன் மீது ரஷ்யா போர்த் தொடுத்தது. இந்தப் போர் இன்று 238ஆவது நாளாகவும் தொடர்ந்தும் நடைபெற்று வருகிறது. இரு நாட்டுக்கிடையேயான போரில் இரு தரப்பிலும் சேதங்கள் இருந்தாலும் உக்ரைனின் பல பகுதிகள் கடுமையான இழப்புகளைச் சந்தித்து வருகின்றன.

மேலும், தற்போது உக்ரைன் தலைநகர் கீவில் ரஷ்யப்படை ஏவுகணைகள் மூலம் இரண்டாம் கட்ட தாக்குதலைத் தொடர்ந்து வருகின்றன.

இந்நிலையில், ரஷ்யப் படையெடுப்பால்




போர் தொடங்கியதிலிருந்து இதுவரை கிழக்கு ஐரோப்பா மற்றும் மத்திய ஆசியாவைச் சேர்ந்த அண்டைநாடுகளில் 40 இலட்சம் குழந்தைகள் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக ஐ.நா. கவலை தெரிவித்துள்ளது.

# உலகில் அதிக விலையுயர்ந்த மிகப்பெரிய வைரம் டுபாயில்!

உலகில் அதிக விலையுள்ள மிகப்பெரிய வைரம் டுபாயில் சோத்பை நிறுவனம் நடத்திய கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டது.



303.1 கெரட் எடை கொண்ட மஞ்சள் நிற கோல்டன் கேனரி வைரம், வெட்டப்பட்ட வைரங்களில் உலகிலேயே மிகப்பெரிய ஒன்றாகும்.

கொங்கோ ஜனநாயகக் குடியரசில் 1980களில் கண்டுபிடிக்கப்பட்ட இதன் மதிப்பு சுமார் 15 மில்லியன் அமெரிக்க டொலர் எனவும், டிசம்பர் 7ஆம் திகதி நியூயோர்க்கில் ஏலம் விடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## புலமைப்பரிசில் வழிகாட்டி

5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றத் தயாராகும் மாணவர்களின் நன்மைகருதி ஜூனியர் சஞ்சிகை விசேட பதிப்பாக வாரந்தோறும் திங்கட்கிழமை வெளிவரும்.

விலை 50/= மட்டுமே

பாடசாலைகளுக்கு விசேட விலைக்கழிவு

அழையுங்கள் 076 139 3805


Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7